பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 27 ஞாயிற்றுக்கிழமை 10.05.2020 கதிர் 186

## 847 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே 10
மேலும் 12 பேருக்கு கொரோன வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் மொத்த பக்கம் 04

# திட்டமிடலின்றி ஊரடங்கை தளர்த்துவது பேராபத்து!

## சஜித் அணி கடும் எச்சரிக்கை



கொழும்பு, மே 10
முறையான திட்டமிடலொன்று இல்லாமல் எதிர்வரும் 11ஆம் திகதி நாடளாவிய ரீதியாக ஊரடங்கைத் தளர்த்துவதானது, மக்களுக்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என சஜித் பிரேமதாஸா வின் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான அஜித் பி. பெரேரா தெரிவித்தார். பக்கம் 02

## இது ரகசியம் அல்ல!

நேற்றுப் போல இன்றும் சில கொசுறுத் தகவல்கள். ஆனால் அவை பெரும்பாலும் கொழும்பு அரசியல் செய்திகள் அவற்றைப் பார்க்கலாம்.
நிதி அமைச்சின் செயலாள ராக இருப்பவர் எஸ்.ஆர்.ஆட்டி கல. திடீரென பக்கம் 02

## மயிலிட்டியில் குண்டுகள் மீட்பு!



யாழ்ப்பாணம், மே 10
பலாலி பொலிஸ் பிரிவிற்குட் பட்ட மயிலிட்டி தென்மயிலைப் பகுதியில் கிணற்றில் இருந்து மோட்டார் குண்டுகள் கண்டு பிடிக்கப் பக்கம் 02

## இராணுவத்தினர் வீடு புகுந்து தாக்கினர் எனக் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், மே 10
வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில் பகுதியில் நேற்று முன் தினம் இரவு வீடுகளுக்குள் புகுந்த கும்பல் ஒன்று அங்கிருந்த வர்கள் மீது தாக்குதல் நடத்தி அடாவடியில் ஈடுபட்டுள்ளது.
இந்தச் சம்பவத்தில் வயோதி பப் பெண்மணி காயங்களுக்கு உள்ளானார்.
இந்தத் தாக்குதல் சம்ப வத்தை நடத்தியது சீருடையினர் என்றும், பக்கம் 02

## 2 மாவட்டங்களில் ஊரடங்கு தளராது

கொழும்பு, மே 10
திங்கட்கிழமை முதல் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு அரசு நடவடிக் கைகளை எடுத்து வந்தாலும் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்கு தளர்வு சாத்தியமில்லை எனத் தகவல் கள் கிடைத்துள்ளன.
நாடு தழுவியதாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டும் பின்னர் கொழும்பு, கம்பஹா, களுத் துறை, புத்தளம் மற்றும் யாழ்ப் பாணம் ஆகிய 5 மாவட்டங்கள் தவிர்ந்த பக்கம் 02

## பழைய நாடாளுமன்றம் கூட்டப்படவேமாட்டாது

### அரசு மீண்டும் திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, மே 10
எந்தவொரு சூழ்நிலையிலும் பழைய நாடாளுமன்றம் மீண் டும் கூட்டப்போவதில்லை என அரசு நேற்று மீண்டும் தெரிவித் துள்ளது. பக்கம் 04

## நாளை முதல் பங்குச்சந்தை இயங்கும்

நாளை திங்கட்கிழமை முதல், கொழும்பு பங்குச்சந்தை நட வடிக்கைகளை மீண்டும் ஆரம் பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான முதல் வழக்கு நாளை

## எல்லா மனுக்களையும் ஒன்றாக அன்றே எடுக்கக் கோரப்படுமாம்

கொழும்பு.மே 10
நாடாளுமன்ற கலைப்பு, பொதுத் தேர்தல் ஆகியவற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பல்வேறு மனுக்களில் முதல் மனு நாளை திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் பிரதம நீதி யரசர் தலைமையிலான – மூன்று நீதியரசர்கள் கொண்ட – ஆயத் தின் முன்னால் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது. பக்கம் 04

## சட்டவிரோதமாகவே தேர்தலில் போட்டியிட்டார் கோட்டாபய!

### சாடுகின்றார் மங்கள சமரவீர

கொழும்பு, மே 10
அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிக்கொண்டவர்கள் பற்றிய புதிய பெயர்ப்பட்டியலில் ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷவின் பெயர் உள்ளடக்கப்பட்டிருந்த நிலையில், அவர் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அரசமைப்பிற்கு முர ணாகவே போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார் என முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டியிருக்கிறார்.
அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிக்கொள்வதற்கு விண்ணப் பிப்பவர்களில் பக்கம் 02

## ஜனாதிபதியின் செயலாளர் குறிப்பிட்ட புள்ளிவிவரம் தவறு என்கிறார் ஹர்ஷ

அரச ஊழியர்களின் சம் பளம் மற்றும் விசேட கொடுப்ப னவுகளுக்காக மாதாந்தம் ஐயாயிரத்து 400 கோடி ரூபா மாத்திரமே செலவிடப்பட்டு வருவதாக மத்தியவங்கி மற்றும் நிதி அமைச்சின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.
எதிர்க்கட்சி தலைவர் அலு வலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரி வித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–
அரச ஊழியர்களின் சம்ப ளம் மற்றும் விசேட கொடுப்பன வுகளுக்காக மாதாந்தம் பத்தாயி ரம் கோடி ரூபா செலவிடப்படுவ தாக ஜனாதிபதி செயலாளர் கலா நிதி பி.பீ.ஜயசுந்தர வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
ஆனால் மத்தியவங்கி மற் றும் நிதி பக்கம் 02

## அரசு வழங்கும் ரூ.5,000 போதுமானதாக இல்லை!

### 20,000 ரூபா வேண்டும் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, மே 10
இடர்காலக் கொடுப்பனவாக வருமானம் குறைந்த குடும்பங் களுக்கு அரசு வழங்கும் 5,000 ரூபாக் கொடுப்பனவு போது மானதாக இல்லை எனவும் குறைந்தபட்சம் 20 ஆயிரம் ரூபாவாக உதவிக் கொடுப்ப னவு உயர்த்தப்படவேண்டும் எனவும் ஐக்கிய பக்கம் 02

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போய் இருதய நோய் ஆஸ்பத்திரியில் படுத்துள்ளார். அங்கிருந்தபடி பதவியை இராஜினாமாச் செய்யத் தயாராகி விட்டார் என்பது உள்வீட்டுத் தகவல். அதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

இலங்கையில் நிதித்துறையில் பழமும் தின்று கொட்டையும் போட்டவர் பி.பீ. ஜயசுந்தர. முன்னர்பல தடவைகள் நிதி அமைச்சுக்குச் செயலாளராகவும், திறைசேரியின் நிரந்தரச் செயலாளராகவும் இருந்தவர். பொருளாதார விவகாரங்களில் நிபுணர். அவர் இப்போது ஜனாதிபதியின் செயலாளர்.

நிதி அமைச்சின் செயலாளராக எஸ். ஆர்.ஆட்டிகல இருந்தாலும், நிதி அமைச்சின் விடயங்களில் எல்லாம் தலையைப் போட்டு, தீர்மானங்களை எடுத்து, முடிவுகளை மேற்கொண்டு, விடயங்களைக் கையாள்பவர் பி.பீ.ஜயசுந்தரதானாம்.

இதனால் வெறுத்துப் போய் விட்டார் ஆட்டிகல. யாரோ எடுக்கும் முடிவுகளுக்கு பிற்காலத்தில் தாம் பொறுப்பேற்க நேரும் என்று கருதி மெல்ல ஜாகா வாங்க விரும்புகின்றார் எனத் தகவல்.

இவ்வார முற்பகுதியில் அலரிமாளிகையில் முன்னாள் எம்.பிக்களின் கூட்டத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட்டியிருந்தார் அல்லவா? அந்தக் கூட்டத்தில் நாட்டின் நிதி, பொருளாதார நிலைமை குறித்து விளக்கம் அளிக்கும் பொறுப்பை ஆட்டிகலவிடம் ஒப்படைத்தார் பிரதமர்.

நாட்டின் உண்மை நிலைவரத்தை அப்படியே பச்சையாக ஆட்டிகல வெளிப்படுத்தியமையால் அரசு உயர்பீடம் அவர் மீதும் கடும் காய்ச்சலில் இருக்கின்றதாம். அதை அறிந்து கொண்டு விட்ட ஆட்டிகல மெல்ல கழன்று விடுவது உசிதம் என்ற முடிவுக்கு வந்துவிட்டார் என்கின்றது பிறிதொரு வட்டாரம்.

இன்னொரு முக்கிய விடயமும் உண்டு. முன்னைய நல்லாட்சி அரசினால் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி வரையான காலத்துக்கே இடைக்கால வரவு – செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. அதற்குப் பின்னரான காலத்துக்கு நாடாளுமன்ற அங்கீகாரமின்றி 'அரசாங்கக் கஜானா மீற்றர்' கண்மண் தெரியாமல் ஓடுகின்றது. இது சட்ட விரோதமானது, அரசமைப்புக்கு மாறான நடவடிக்கை என்கின்றது எதிரணி. ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் அப்படிச் செய்யலாம் என்கின்றது ஆளும் தரப்பு.

அரசுத் தரப்பும் எதிர்த் தரப்பும் இதில் சிண்டைப் பிய்த்துக் கொண்டாலும் நாளைக்கு விவகாரம் நீதிமன்றுக்குப் போகும் போது நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் இல்லாமல் இந்த அரச செலவீனங்களுக்கு அனுமதித்தமைக்கான பொறுப்புக்களை ஏற்க வேண்டிய அரச அதிகாரிகளில் முதலாமவர் நிதி அமைச்சின் செயலாளர்தான்.

ஆக, அந்தப் பிரச்சினைக்குத் தாம் முகம் கொடுப்பதிலும் பார்க்க நேரத்துடன் கழன்று விடுவது நல்லது என்று பார்க்கின்றாராம் ஆட்டிகல்ல.

எது, எப்படியோ, அரசியல் தலைகளின் இழுபறியில் தாம் ஏன் சிக்கிச் சீரழிவான் என்ற அவரது எண்ணம் புத்திசாலித்தனம்தான். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

★ ★ ★

திடுதிப்பென அரசமைப்புக் கவுன்ஸிலை அதன் தலைவர் கரு ஜயசூரிய கூட்டியிருக்கின்றார். கூட்டம் நாளைக்கு.

என்ன, ஏது என்று விசாரித்துக் பார்த்தேன். பிரதம தேர்தல் ஆணையாளரின் சிக்கல்தான்.

ஐரோப்பிய நாடு ஒன்றில் அவரின் மகன் படித்துக் கொண்டிருந்தான். கொஞ்சம் சுகவீனமாக பையன். கொரோனா நெருக்கடி சமயம், வெளிநாடுகளில் சிக்கிக் கொண்ட இலங்கை மாணவர்களை மீள அழைக்கும் நடவடிக்கையில் அரசு மும்முரமாக இருக்கின்றது. முதலில் நாடு திரும்பிய மாணவர் அணிகளில் பிரதம தேர்தல் ஆணையாளரின் மகனும் ஒருவன்.

அவ்வளவுதான். அதை மணந்து பிடித்த சில தரப்புகள் சமூக ஊடகங்கள் ஊடாக ஒரு பிடி பிடித்தன. பிரதம தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தமது பதவி அதிகாரத்தைப் பயன்படுத்தி, அரசாங்கத்திடம் செல்வாக்கு செலுத்தி, தமது மகனை நாட்டுக்குத் திரும்பக் கொண்டு வந்து விட்டார் என கீழ்த்தரமான விமர்சனங்கள் எழுந்தன. கொதித்துப் போனார் மஹிந்த தேசப்பிரிய.

இந்தக் குற்றச்சாட்டுக்காகத் தாம் பதவியை இராஜினாமாய் செய்து விலகத் தயார் என்று அறிவித்து விட்டார். இந்த அறிவிப்பு பலரையும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தி விட்டுள்ளது. மிக நெருக்கடியான இந்தக் குழப்ப சமயத்தில் பிரதம தேர்தல் ஆணையாளர் பதவியை இராஜினாமாச் செய்தால் நிலைமை மோசமாகி விடும் என்று உணர்ந்த சபாநாயகர் கரு ஜயசூரிய நிலைமையை சமாளிப்பதற்காக அரசமைப்புக் கவுன்ஸிலை அவசர அவசரமாக அழைத்தார். அரசமைப்புக் கவுன்ஸிலில் சுயாதீனக் குழுக்கள் குறித்து ஆராயும் என்றார் அவர். ஆனால் நாளை நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவும் – அதன் மூன்று ஆணையாளர்களும் – அழைக்கப்பட்டுள்ளனர். அங்கு வைத்துப் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கலாம் என்பது கரு ஜயசூரியாவின் திட்டம்.

எனினும் நாளைய கூட்டத்துக்கு முன்னரே பிரதம தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை வழிக்கு கொண்டு வந்து இராஜினாமாத் திட்டத்தைக் கைவிடச் செய்யும் இணக்கம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அதனால் நாளை கூட்டம் வெறும் Formality one என்கின்றன அவை.

★ ★ ★

இந்த வார முற்பகுதியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட்டிய எம்.பிக்களின் கூட்டத்தில் கூட்டமைப்புப் பங்குபற்றும் முடிவை எடுத்த தந்திரோபாயத்தின் சாணக்கியர் மாவை சேனாதிராஜா என்றும், அவரின் தந்திரோபாயத்துக்குக் கிடைத்த வெற்றி அது என்றும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட அது பரபரப்பாகப் பேசப்பட்டதல்லவா? 'Put the record straight' என்று நினைக்கின்றேன். இந்தப் பின்புலத்தில் உண்மையில் நடந்தது என்ன என்று நாளை இப்பத்தியில் விலாவாரியாகப் பார்ப்போமா...?

★ ★ ★

யாழ் செயலகத்துக்கு வந்த நிவாரணப் பொருள்களை அரசியல்வாதி ஒருவர் தன்னுடையவை போல காட்டி, 'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைப்பது' போல 'தானம்' செய்தார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பான விடயம் பரபரப்பாகப் பேசப்படுகின்றதல்லவா?

அது குறித்து விசாரணை நடத்துவதற்காக தேர்தல் திணைக்களத்தில் இருந்து உயர்மட்ட விசாரணைக்குழு ஒன்று யாழ். வருவதாகவும், நாளை திங்கள் முதல் எதிர்வரும் சனிக்கிழமை (16ஆம் திகதி வரை அக்குழு யாழில் தங்கியிருந்து விசாரணை நடத்தும் என்றும் ஒரு தகவல் கிடைத்தது.

விடயம் மலிந்தால் சந்தைக்கு வரும் தானே...! அப்போது பார்ப்போம்.

–மின்னல்–

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் அறிக்கைக்கு அமைய பார்க்கையில் 54 பில்லியன் ரூபாய் மாத்திரமே செலவிடப்பட்டு வருவதாக கணக்கறிக்கை தெரிவிக்கின்றது.

தற்போது மேலதிக கொடுப்பனவும், விசேட கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டுள்ளதனால் 3 ஆயிரத்து 400 கோடி ரூபா அளவிலேயே செலவிடப்படுகின்றது – என அவர் குறிப்பிட்டார்.

அரச ஊழியர்களின் சம்பளத்தைத் தடுத்துவைக்காமல் பொருளாதார செயற்பாடுகளை சிறந்த முறையில் மேற்கொள்ளலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பி.பீ.ஜயசுந்தர தனது தனிப்பட்ட கருத்தை ஜனாதிபதி செயலகத்தின் சின்னம் பொறிக்கப்பட்ட கடித உறையில் வெளியிட்டிருந்தமை தவறாகும்.

இருந்த போதிலும் அவரது வேண்டுகோளுக்கிணங்க யார் வேண்டும் என்றாலும் அவர்களின் சம்பளத்தை தியாகம் செய்யலாம். ஆனால் அவர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சில விடயங்கள் தொடர்பில் அவருக்கு விளக்கமளிக்க வேண்டியுள்ளது. – எனவும் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

## அரசு வழங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணநாயக்க கோரியுள்ளார்.

அரச ஊழியர்களின் மே மாதச் சம்பளத்தை முழுமையாக அல்லது பகுதியாக அரசுக்கு வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர கோரியுள்ளமை மூலம் அரசு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வது தெளிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகோதாவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னர் தமது ஆட்சி அமைத்த முதல் 100 நாள்களில் தான் நிதி அமைச்சராக இருந்தபோது சிரமங்கள் இருந்தபோதும் பொதுத்துறை ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கினார் எனவும் அவர் குறிப்பிட்டார் .

எரிபொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் விலைகளைக் குறைக்கத் தமது அரசு எவ்வாறு நடவடிக்கை எடுத்தது எனவும் அவர் நினைவு கூர்ந்தார்.

கொரோனா நெருக்கடியின் மத்தியில் நாட்டின் பொருளாதாரத்தை கவனத்துடன் கட்டமைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அனைத்து சவால்களையும் மீறி நாட்டின் 22 மாவட்டங்களிலும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்ள எமது கட்சி தயாராக உள்ளது எனவும் அவர் கூறினார்.

எனினும் கொரோனா தொற்றுநோய் நாடு முழுவதும் பரவியுள்ள ஒரு நேரத்தில் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக தேர்தல்களை நடத்தும் அரசின் முயற்சியை ஆதரிக்கத் தமது கட்சி தயாரில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## மயிலிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன. மீள்குடியேற்ற கிராமமான இங்கு நேற்று மாலை கிணற்றை இறைத்துச் சுத்தம் செய்யும்போதே 20 மேற்பட்ட மோட்டார் குண்டுகள் காணப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இந்தக் கிராமத்தில் மீள்குடியேறிய குடும்பம் ஒன்று குடிதண்ணீர்க் கிணற்றை இறைத்துச் சுத்தம் செய்யும்போதே இந்தக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக பலாலி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 2 மாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய மாவட்டங்களில் ஊரடங்கு தளர்வு மட்டுப்படுத் தப்பட்டதாக மாற்றியமைக்கப் பட்டிருந்தது.

பின்னர் யாழ்.மாவட்டமும் தொடர் ஊரடங்கு நடைமுறையில் இருந்து விடுவிக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட ஊரடங்கு தளர்வு நடைமுறைக்குள் கொண்டு வரப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய 4 மாவட்டங்களில்லும் தொடர் ஊரடங்கு இறுக்கமான முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில்தான் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வரும் வகையில் வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நாடு தழுவியதாக ஊரடங்கு தளர்வு இடம் பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இது குறித்த முக்கிய கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. சுகாதாரத் தரப்பு அறிக்கைகளின் பிரகாரம் அபாயமுள்ள பகுதிகளாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது.

ஆனால், களுத்துறை, புத்தளம் மாவட்டங்களில் நிலைமை சற்று சீராகியிருப்பதால் அந்த இரண்டு மாவட்டங்களைத் தவிர்த்து இப்போதும் அச்சுறுத்தல் உள்ள கொழும்பு, கம்பஹா ஆகியவற்றில் ஊரடங்குச் சட்டத்தை தொடரலாமா என அரசு தரப்பில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்தும் புதிய கொரோனா தொற்றாளர்கள் இனம்காணப்பட்டு வரும் நிலையில் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் இன்னும் குறிப்பிட்ட சில நாள்களுக்கு ஊரடங்கை தொடரலாம் என்ற முடிவை நோக்கியே ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன என அறிய முடிகிறது.

## இராணுவத்தினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் இராணுவ இலச்சினை பொறிக்கப்பட்ட தொப்பி மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றைக் கைவிட்டு சென்றுள்ளனர் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த வயோதிபப் பெண் சிகிச்சைக்காக பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## திட்டமிடலின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், ஊரடங்கைத் தளர்த்தும்போது சரியான திட்டமிடல் அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாளை திங்கட்கிழமை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில், நாட்டை இவ்வாறான நிலைமையில் வைத்துக் கொண்டிருக்க முடியாது. ஆனால், ஊரடங்கைத் தளர்த்தும்போது சரியான திட்டமிடலொன்று அவசியமாகும்.

உலக நாடுகள் சில சரியான திட்டமிடலுடன்தான் ஊரடங்கை தளர்த்தின.

கொரோனா வைரஸ் நிலைவரம் தொடர்பாக தீவிரமாக ஆராய்ந்தே முடிவுகளை எடுத்தது. ஆனால், துரதிஷ்டவசமாக எமது அரசு அவ்வாறான திட்டமிடல்களை மேற்கொள்ளவில்லை.

அரசின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் தேர்தல் இலக்குத்தான் காணப்படுகிறது.

இலங்கையின் பொருளாதாரம் கடந்த ஆண்டு நவம்பரில் இருந்து வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த நிலையில், அரசு அரசியல் நோக்கங்களை விடுத்து, நேர்மையான மக்கள் சேவைக்கு முன்வர வேண்டும்.

இதனைத்தான் நாட்டு மக்களும் விரும்புகிறார்கள். அரசின் திட்டங்கள் நாளுக்கு நாள் மாற்றமடைகின்றன. முதலில் ஒரு வர்த்தமானி வெளிவருகின்றது. பின்னர் அந்த வர்த்தமானிக்கு எதிரான ஒரு முடிவு எடுக்கப்படுகிறது.

இங்கு ஒரு தீர்க்கமான கொள்கையொன்று கிடையாது. அரச – தனியார் தரப்பினர் என அனைவரும் இன்று இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனை அரசு கைவிட வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்.

அப்படி அரசு மக்களுக்காகப் பணியாற்ற முன்வருமாக இருந்தால், நிச்சயமாக நாம் எமது ஆதரவை அரசுக்கு வழங்குவோம் – என்றார்.

## சட்டவிரோதமாகவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியுரிமை நீக்கப்பட்டவர்களின் பெயர்கள் உள்ளடங்கிய பட்டியலை அமெரிக்கா ஒவ்வொரு காலாண்டும் வெளியிடுவது வழமை.

அவ்வாறு இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்கள் அடங்கிய காலாண்டுக் கான பெயர்ப்பட்டியல் அமெரிக்காவினால் வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பெயரும் உள்ளடங்கியிருக்கிறது.

கோட்டாபயவின் குடியுரிமை சர்ச்சை தேர்தல் காலத்தில் எழுந்திருந்தது.

இந்நிலையில் நேற்று முன் தினம் அமெரிக்காவினால் வெளியிடப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலில் கோட்டாபய ராஜபக்ஷவின் பெயர் உள்ளடங்கியிருப்பதால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேளையில் அவர் அமெரிக்கக் குடியுரிமைக்கு உரித்துடையவராக இருந்தாரா என்ற பாரிய சந்தேகத்தை இது ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் கூறியிருப்பதாவது:–

கோட்டாபய ராஜபக்ஷ இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருந்தபோதிலும், அவர் அரசமைப்பிற்கு முரணாகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவாகியிருக்கிறார் என்பது இப்போது உறுதியாகின்றது. இலங்கையின் அரசமைப்பை மீறும் வகையில் அடிக்கடி அவரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கு இப்போது அர்த்தம் புரிகிறது. – என்று பதிவிட்டுள்ளார்.

# காட்டு யானைக்கான மின்வேலியில் மோதி எட்டு வயதுச் சிறுவன் மரணம்

## திருமலை மொரவெவவில் பரிதாபம்



திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 10 ஆம் கட்டை பகுதியில் நேற்று மின்சாரம் தாக்கி சிறுவனொருவன் உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு யானைகளின் தொல்லையினால் அப்பகுதியை சுற்றி மின்வேலி பொருத்தப்பட்டிருந்த நிலையில் கடைக்குச் சென்ற சிறுவன் மின் வேலியில் மோதியதினாலேயே இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த சிறுவன் திருகோணமலை, வில்கம் விகாரை பாடசாலையில் 03 ஆம் தரத்தில் கல்வி பயிலும் 10 ஆம் கட்டை பகுதியைச்சேர்ந்த கவிஷ்க தெனித் சஞ்ஜீவ (வயது08) எனவும் தெரிய வருகின்றது.

இந்தச் சிறுவன் மின்வேலியில் மோதியதையடுத்து 1990 அவசர அம்பியூலன்ஸ் வண்டி மூலம் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளான் எனவும்தெரிய வருகின்றது.

உயிரிழந்த சிறுவனின் சடலம் தற்பொழுது மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொகவந்தலாவ தோட்டப் பகுதியில் கூடு கலைந்து குளவிகள் ஆக்ரோஷம்

## 14 தொழிலாளர்கள் கொட்டுக்கு இலக்காகினர்

பொகவந்தலாவ லொய்னோன் தோட்டப்பகுதியில் உள்ள 05ம் இலக்க தேயிலை மலையில் தொழில் புரிந்து கொண்டிருந்த 14 ஆண் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முற்பகல் 11 மணி அளவில் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தத் தோட்டபகுதியில் உள்ள மரம் ஒன்றில் இருந்து குளவி கூடு கலைந்து கீழே விழுந்தமையினால் இந்த ஆண் தொழிலாளர்கள் குளவிகளின் கொட்டுக்கு இலக்காகினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயங்களுக்கு உள்ளான 14 தொழிலாளர்களும் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் எனவும் குளவி கொட்டுக்கு இலக்கானவர்கள் குறித்து



அச்சமடையத் தேவையில்லையெனவும் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை - ரூபாய் 500/-
முழு வர்ணம் - ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**தோட்டக்காணி தேவை**

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது. உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு. வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை. (வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

**வேலைவாய்ப்பு - இரவுக் காவலாளி**

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

# வெளிநாட்டவரின் விசாக் காலம் மேலும் 30 நாள்களுக்கு நீடிப்பு

இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவரின் விசாக்கள் மேலும் 30 நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி அனைத்து வகையான விசாக்களின் செல்லுபடியாகும் காலம் ஜூன் பதினோராம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட விசா கட்டணத்தை செலுத்தி ஜூன் பதினோராம் திகதிக்கு முன்னதாகப் புதுப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

மேலும் இணையம் மூலமாக முற்பதிவுசெய்தவர்கள் மட்டுமே அலுவலகத்திற்குள் அனுமதி அளிக்கபடுவர் எனவும் அதிலும் வழங்கப்பட்ட நேரத்திற்கு 15 நிமிடத்திற்கு முன்னரே உள்ளே அனுமதிக்கப்படுவர் எனவும், அனுமதி நேரத்திலிருந்து 10 நிமிட அவகாசத்தின் பின்னர் அந்த முற்பதிவு செல்லுபடியற்றதாகும் எனவும், தவறுவோர் புதிய அனுமதி பெற்றே மீண்டும் வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஏதாவது காரணத்தினால் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டால் அலுவலகத்திற்கு சமுகம் தர வேண்டாம் எனவும், மின்னஞ்சல் மூலமாக புதிய நேரத்தைப் பெறமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு அப்பால் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக நாட்டை விட்டு வெளியேறுபவர் ஆயின் விமான நிலையத்தில் குறித்த

விசா கட்டணத்தை செலுத்துவதன் மூலம் பிரயாணத்தைத் தொடர முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# இன்னும் 4,428 பேர் தனிமைப்படுத்தலில்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 39 தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையங்களில் 4,428 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனரென, கொவிட் 19 தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இதுவரை 6,299 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடு திரும்பியுள்ளனரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான படை வீரர்களின் எண்ணிக்கை 409 ஆக அதிகரித்துள்ளதாக, கொவிட் 19 தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

# வர்த்தமானி இன்று

மே மாதம் 11 ஆம் திகதி முதல் மக்கள் இயல்பு நிலைக்கு கொண்டுவருவது தொடர்பில், தனிமைப்படுத்தல் விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல், இன்று வெளியிடப்படுமென, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய உரிய விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியது அனைத்து தரப்பினரினதும் கடமையாகுமென, அவர் தெரிவித்துள்ளார்.

# கைவிடப்பட்ட புத்தர் சிலைகள் ஒன்றுசேர்த்து தீயில் சுட்டு எரிப்பு

இலங்கையில் முதற்தடவையாக நேற்று சனிக்கிழமை புத்தர்சிலைகள் தீயில் சுட்டுளிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டம் எம்பிலிப்பிட்டிய போதிராஜ தர்ம நிலையத்தில் இலங்கையின் பிரதான சங்கத் தலைவராகிய கலாநிதி ஓமல்பே சோபித்த தேரரின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பல வீடுகளிலும், தெருக்கள் ஓரமாக உள்ள அரச மரத்தடிகளிலும் கைவிடப்பட்ட நிலையில் இருந்த புத்தர் சிலைகள் இவ்வாறு சேகரிக்கப்பட்டுதீயில் சுட்டுளிக்கப்பட்டன.

இதுபற்றி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஓமல்பே சோபித்த தேரர், இவ்வாறு புத்தர் சிலைகளை மக்கள் இல்லாத இடங்களில், தெருக்கள் ஓரமாக மரத்தடிகளில் கைவிடப்பட்டுச் செல்வதால் பௌத்த மதத்திற்கே பேரவமானம் ஏற்படுவதாகக் கவலை வெளியிட்டார்.



# நமது பார்வை



உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## 'சட்டம் பாயும்' என உணர்த்துங்கள்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது எதிர்க்கட்சிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றன.

அவை தொடர்பில் இப்போது எதிர்கட்சிகள் நீதிமன்றிற்கும் போயிருக்கின்றன. நீதிமன்ற விசாரணைகள் முடிய முன்னர் – தீர்ப்பு வர முன்பு – அது குறித்து நாம் முடிவு கூறுவது பொருத்த மற்றது.

கலைத்த நாடாளுமன்றத்தை மீளக் கூட்டும்படி எதிரணி கேட்கின்றது.

மூன்று மாதங்களில் புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டும் நிபந்தனையுடன்தான் இருக்கும் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆகவே புதிய நாடாளுமன்றத்தை மூன்று மாதங்களுக்குள் கூட்ட முடியாது என்பது தெளிவாகிவிட்டமையால், முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்த உங்களின் பிரகடனத்தை வாபஸ் பெற்று நாடாளுமன்றத்தை மீள இயங்க விடுங்கள் – என்பது எதிர்க்கட்சிகளின் வற்புறுத்தல். நிலைப்பாடு.

கொள்கை – கோட்பாட்டில் ரீதியில் – அந்த வாதம் சரியாக இருக்கலாம். அத்தகைய வாதத்தை ஏற்று அதன் அடிப்படையில் முன்னைய கலைப்பை ரத்துச் செய்து நாடாளுமன்றத்தை மீள இயங்கும் உத்தரவை உயர்நீதிமன்றம் விடுக்கலாம். அரசமைப்பையும் சட்டத்தையும் வியாக்கியானம் செய்து அத்தகைய உத்தரவை வழங்கும் அதிகாரம் உயர்நீதிமன்றுக்கு உண்டு.

ஆனால், தாம் கலைத்த நாடாளுமன்றத்தை – அதுவும் புதிய பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்து ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு பொதுத் தேர்தல் நடவடிக்கைகள் முன்னோக்கி நகர்ந்த பின்னர் – அந்தக் கலைப்பை ரத்துச் செய்து, பழைய நாடாளுமன்றத்தை மீண்டும் சாதாரணமாக இயங்க விடுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டா? அரசமைப்பு மூலமோ, சட்டடத்தின் மூலமோ ஜனாதிபதிக்கு அத்தகைய அதிகாரம் உண்டு என்று அரசமைப்பிலோ, வேறு சட்டங்களிலோ எழுதப்பட்டிருக்கின்றதா என்று கேட்டால் இல்லை என்றேதான் பதில் சொல்ல முடியும்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைப் புதிய பொதுத்தேர்தல் நடந்து முடிவதற்கு இடையில் ஏதேனும் ஒரு நெருக்கடியைக் கையாள்வதற்கு மட்டுமே ஜனாதிபதி கூட்ட முடியும் என்று அரசமைப்பின் 70 (7) பிரிவு கூறுகின்றது. முழுமையாக நாடாளுமன்றத்தைத் திரும்ப அழைத்துச் செயற்பட விடுவதோ, பிரகடனப் படுத்தப்பட்ட தேர்தலை ரத்துச் செய்வதோ ஜனாதிபதிக்கு உரிய அதிகாரங்களாக சட்டத்திலோ அரசமைப்பிலோ குறிப்பிடப்பட வில்லை.

ஆகவே, இப்போதுள்ள சர்ச்சை நிலையில் ஜனாதிபதியைக் குறை கூறுவதை விடுத்து, நீதிமன்றம் மூலம் நீதி, நியாயம் பெற முயற்சிப்பதுதான் பொருத்தமானது. அதுதான் இப்போது நடக்கின்றது. நடக்கட்டும்.

இதேசமயம், நாடாளுமன்றம் உரிய காலத்தில் கூடமுடியாத நிலையில், வரவு – செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படாத சூழலில், ஜனாதிபதி எதேச்சதிகாரமாக நிதி அதிகாரங்களை அரசமைப்புக்கும் சட்டத்துக்கும் முரணாக கையாள்கின்றார் என்றும், இந்த அரசமைப்பு மீறல் நடவடிக்கைக்காக ஜனாதிபதி சட்டரீதியான தண்டிக்கப்படலாம் என்றும் ஐ.தே.க. கட்சியின் முன்னாள் எம்.பியும், முன்னாள் அமைச்சருமான மங்கள சமரவீர கூறுகின்றார்.

நல்லது, ஜனாதிபதி ஒருவர் அதிகாரத்தில் – பதவியில் – இருக்கும் போது அவரை சட்ட ரீதியாகத் தண்டிப்பது சுலபமானதல்ல. அதற்கு அவர் பதவி இறங்கும் வரை காத்திருக்க வேண்டும்.

அப்படியாயின், கோட்டபாய ஜனாதிபதி பதவியை விட்டு இறங்கும் வரையில் காத்திருந்துதான் அவரைத் தண்டிக்க முயற்சிக்க வேண்டும்.

தாம் இப்போது தவறிழைத்தால் பதவியை விட்டு இறங்கிய பின்னர் தண்டிக்கப்படலாம் என்ற உணர்வு பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு எப்போது வரும்? அதற்கு முன் உதாரணங்கள் இருந்தால் மட்டுமே அதை அவர் உணர்வார்.

இப்போது ஜனாதிபதி பதவியை விட்டு இறங்கிய மூவர் உயிரோடுள்ளனர். சந்திரிகா, மஹிந்தர், மைத்திரி ஆகியோரே அவர்கள்.

இதில், நாடாளுமன்றத்தின் நான்கரை ஆண்டுக்காலம் முடியும் வரை அதை ஜனாதிபதி கலைக்க முடியாது என்று அரசமைப்பு தெளிவாகக் சொல்லியிருந்தும் –

அதை உதாசீனப்படுத்தி விட்டு, அரசமைப்புக்கு முரணாக நடாளுமன்றத்தைக் கலைத்துப் பெரும் குழப்பம் ஏற்படுத்தியவர் மைத்திரிபால சிறிசேன. அவரது அந்த நடவடிக்கை அவர் ஜனாதிபதியாக இருந்த போதே உயர்நீதிமன்றத் தீர்ப்பு மூலம் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

சரி, அந்தத் தவறுக்காக – சட்ட விரோதமான முறையில் நாட்டைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியமைக்காக – அவர் அதிகாரத்தில் இருந்தபோது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆனால் இப்போது எடுக்கலாம் அல்லவா?

அப்படி எடுத்து நீதிமன்றம் மூலம் உரிய தண்டனை பெற்றுக் கொடுத்தால், இப்போது ஜனாதிபதியாக இருப்பவருக்கும், இனிமேல் ஜனாதிபதியாக வரப்போகின்றவர்களுக்கும் சரியான வழிகாட்டலாக அது இருக்காதா?

'சட்டம் பாயும்' என்று அதிகாரத்தில் இருக்கும் கோட்டாபய போன்ற தரப்புக்கு சமூக ஊடகங்கள் வாயிலாக 'சண்டித்தனம்' காட்டி, எச்சரிக்கை விடுப்பதிலும் பார்க்க, செயல்முறையில் செய்து காட்டி நிலைநாட்டுவதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

மங்கள சமரவீர போன்ற கோட்டா எதிர்ப்பு அணியினருக்கு இந்தத் தந்திரோபாயம் சமர்ப்பணம்.

# ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதிக்குமாறு கோருகிறார் ரிஷாத்

## ஜனாதிபதிக்கு அவர் கடிதம்



முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கொவிட் 19 வைரஸால் பீடிக்கப்பட்டு உயிரிழக்கும் முஸ்லிம்களின் இறுதி கிரியைகள் நடைபெற வேண்டிய முறைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி தெளிவுப்படுத்தியுள்ளார்.

கொவிட் 19 வைரஸால் தொடர்ந்தும் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதால் முஸ்லிம் சமூகம் பாரிய கவலை கொண்டுள்ளதாகவும் அவர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே கொரோனா வைரஸால் உயிரிழக்கும் நபர்களின் சடலங்களை எரியூட்டுகின்றமை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆலோசனைகளை மீள்பரிசீலனை செய்யுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதிக்குமாறு ரிஷாத் பதியுதீன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

# தனிமைப்படுத்தலை மீறின் 2 ஆண்டுகள் கடூழியச் சிறை!

கொழும்பு, மே. 10

தனிமைப்படுத்தல் சட்டத்தின் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி இந்தச் சட்டத்தை மீறும் நபருக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைதண்டனை விதிக்கப்படக்கூடும் என பொலிஸ் சட்டப்பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டம் உட்பட ஊரடங்கு தளர்வின்போது நடந்துகொள்ளவேண்டிய விதம் பற்றி விபரிக்கும் வர்த்தமானி அறிவித்தல் சுகாதார அமைச்சால் இன்று ஞாயிற்றுக் கிழமை வெளியிடப்படவுள்ளது.

கொரோனா வைரஸ் வேகமாக பரவக்கூடிய அபாய வலயங்களாக அடையாளப் படுத்தப்பட்டிருந்த கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நாளை திங்கட் கிழமை அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் செயற்படவுள்ளன. அதற்கான வழிகாட்டல்களும் வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

எவ்வித பாதிப்பும் இன்றி நாட்டைக் கட்டம், கட்டமாக இயல்பு நிலைக்கு கொண்டுவரும் நோக்கிலேயே புதிய நடைமுறை அறிமுகப் படுத்தப்படுகின்றது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

# ஒரே நாளில் அதிகூடிய பி.சி.ஆர் பரிசோதனை

கொழும்பு, மே. 10

இலங்கையில் ஒரே நாளில் ஆயிரத்து 821 பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட அதிகூடிய பி.சி.ஆர். பரிசோதனை இதுவாகும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

அதேவேளை, தனிமைப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை, நாராஹேன்பிட்டி தாபர மாவத்தை ஆகிய பகுதிகள் விரைவில் விடுக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

## நாடாளுமன்றக்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த முதல் மனுவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், இதேவிடயத்தை ஒட்டித் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பிறமனுக்களையும் இன்றைய தினமே முதல் மனுவுடன் சேர்த்து பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்படி நீதிமன்றத்தைக் கோருவார் எனத் தெரிகின்றது.

2018இல் அப்போதைய ஜனாதிபதியின் அரசியல் சதிப் புரட்சி முயற்சி நடவடிக்கைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களையும் இவ்வாறு குறுகிய கால – இரண்டு மணி நேர முன்னறிவித்தலுடன் – உயர் நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்தமையைச் சுட்டிக்காட்டி நாளை சுமந்திரன் வாதிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுமந்திரனின் அந்த வாதத்தை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளுமாயின் ஏனைய மனுக்களும் நாளையே நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மைத்திரி குணரத்தனவின் மகன் சமத் மைத்திரி குணரத்ன சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவே நாளை நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றது .

அதன் சார்பிலும், பிரபல ஊடகவியலாளர் விக்டர் ஐவன் உட்பட சமூகப் பிரதிநிதிகள் எண்மர் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையாகுவார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தாக்கல் செய்த மனுவின் சார்பில் சட்டத்தரணி விரான் கொராயா ஆஜராவார்.

ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார சார்பில் ஒரு மனுக் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதேவேளை சம்பிக்க ரணவக்க, குமாரவெல்கம ஆகியோர் சேர்ந்து மற்றொரு அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த இரு மனுக்களின் சார்பிலும் சுரேன் பெர்னாண்டோ முன்னிலையாகி வாதிடுவார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி இக்ரம் முகமட் ஆஜராவார். (உ)

## 844 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளிகளின் எண்ணிக்கை 847 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை பாதிக்கப்பட்ட 847 பேரில் இதுவரை 584 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை 255 பேர் குணமடைந்துள்ளதுடன் 09 பேர் உயிரிழந்துள்ளனர்.

## பழைய நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் நெருக்கடி குறித்து விவாதிக்க நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

இந்நிலையில் நேற்று செய்தியா ளர்களிடம் கருத்து தெரிவித்த அமைச் சர் பந்துல குணவர்தன, அவசரகாலச் சூழ்நிலையில் கூட பழைய நாடாளுமன் றம் மீண்டும் கூட்டப்படாது என குறிப்பிட் டுள்ளார்.

மேலும் பழைய நாடாளுமன்றத்தை கூட்ட போவதில்லை என்பதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் நிலைப்பாடு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு அவசரகால நிலைமையை அறிவிக்கவேண்டிய அவசியமும் இல்லை என்றும் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா வைரஸ் பரவலுக்கு வுஹான் சந்தை முக்கிய காரணம்

## அடித்துச் சொல்கிறது உலக சுகாதார அமைப்பு

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியதில் சீனாவின் வுஹான் உயிர்ச் சந்தையின் பங்கு இருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. ஆனால், அந்தச் சந்தைதான் வைரஸின் மூலமாக அல்லது அங்கிருந்து வைரஸ் பரவியதா என்பது தெளிவில்லை என்றும் அது தெரிவித்துள்ளது.

உலக நாடுகளை தற்போது உலுக்கி வரும் கொரோனா வைரஸ், முதன் முதலாக சீனாவின் உகான் நகரில்தான் வெளிப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்று, வுஹானின் உயிர்ச் சந்தையில் இருந்த வௌவாலிடம் இருந்து மனிதர்களுக்கு பரவியதாக முதல் கட்ட தகவல்கள் வெளியாகின. அதைத் தொடர்ந்து அந்த சந்தை மூடப்பட்டது.

ஆனால் அந்த வைரஸ், இயற்கையாக உருவானது அல்ல, அது வுஹான் நகரில் உள்ள வைரலாஜி இன்ஸ்டிடியூட்டின் ஆய்வுக்கூடத்தில் செயற்கையாக உருவாக்கப்பட்டது, அங்கிருந்து கசிந்துதான் பரவி இருக்கிறது என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்த நிலையில் கொரோனா வைரஸைப் பரப்புவதில் சீனாவின் வுஹான் சந்தைக்கு முக்கிய பங்கு இருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.




இதுபற்றி உலக சுகாதார அமைப்பின் உணவு பாதுகாப்பு மற்றும் விலங்கு நோய்கள் நிபுணர் டாக்டர் பீட்டர் பென் எம்பரேக் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் பரவியதில் வுஹான் சந்தைக்கு குறிப்பிடத்தக்க பங்கு இருப்பது தெளிவாகிறது. ஆனால் எந்த அளவுக்கு அதன் பங்களிப்பு இருக்கும் என்பது தெரியவில்லை.

அந்த சந்தை வைரஸின் மூலமாக இருந்ததா அல்லது அங்கிருந்து பரவியதா அல்லது தற்செயலாக சந்தைப்பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வைரஸ் தொற்று கண்டறியப்பட்டதா என்பது தெரியவில்லை. இதைத் தீர்மானிக்க கூடுதல் ஆய்வு தேவை.

இத்தகைய சந்தைகள் பல லட்சம் மக்களுக்கு உணவு மற்றும் வாழ்வாதாரங்களை வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன. சில நேரங்களில் இந்தச் சந்தைகளால் மனிதர்களுக்கு தொற்று நோய் பரவும். ஆனாலும், அவற்றை சட்டவிரோதமாக்கி தடை செய்வதைவிட அவற்றை மேம்படுத்துவதில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

விலங்குகளை மனிதர்களின் நேரடி தொடர்பில் இருந்து பிரித்து வைப்பது உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பு தரங்களை மேம்படுத்துவதன் மூலம், மக்கள் அதிகம் கூடும் நெரிசலான சந்தைகளில், விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு நோய் பரவுவதற்கான அபாயத்தைக் குறைக்க முடியும்.

கொரோனா வைரஸ் விலங்கில் இருந்து பரவியதா? என்பதைத் தீர்மானிக்க விரிவான ஆய்வுகள் தேவை. இதுதொடர்பான ஆய்வில் உலக சுகாதார அமைப்பையோ, பிற வெளிநாட்டு நிபுணர்களையோ சீனா இன்னும் அழைக்கவில்லை.

# கொரோனா அவலம் முடியும்போது 26 கோடி மக்கள் பட்டினியில் வாடுவர்

## ஐ.நா. உலக உணவுத் திட்டம் எதிர்வுகூறல்



கொரோனா முடிவுக்கு வந்ததும் பல நாடுகளும் பொருளாதாரத்தில் தத்தளிக்கும் நிலை ஏற்பட்டு, 26 கோடி மக்கள் பசி, பட்டினி நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்று ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலக உணவு திட்டத்தின் நிர்வாக இயக்குனர் டேவிட் பீஸ்லி இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

கொரோனா முடிவுக்கு வந்ததும் பல நாடுகளும் பொருளாதாரத்தில் தத்தளிக்கும் நிலை ஏற்படும். இந்த ஆண்டு இறுதியில் இதன் நிலைமை மோசமாகும். 26 கோடி மக்கள் பசி, பட்டினி நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

முதலில் அதை தடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இதைச் சரி செய்வதற்கு பணக்கார நாடுகளும், பணக்காரர்களும், பண வசதி கொண்ட நிறுவனங்களும் தாராளமாக உதவ வேண்டும். விநியோக சங்கிலி அறுந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

ஐ.நா.வின் மனிதாபிமான அமைப்பின் தலைவர் மார்க் லோகாக் இதுபற்றி தெரிவித்ததாவது:-

கொரோனா தொற்றின் உச்சம் இன்னும் 3 முதல் 6 மாதங்களுக்கு நீடிக்கலாம். அப்போது ஏழ்மையான நாடுகளும் கடும் பாதிப்புக்கு ஆளாகும். ஏற்கனவே கொரோனாவால் மக்களுக்கு வருமானம் இல்லை.

வேலை வாய்ப்புக் குறைந்துவிட்டது. உற்பத்தியும் இல்லை. ஏற்றுமதி வருவாய், பணம் அனுப்புதல், சுற்றுலா ஆகியவை முடங்கிவிட்டன. சுகாதார அமைப்புகளும் அழுத்தத்தில் இருக்கின்றன. இதுபோன்ற பிரச்சினைகளால் மக்களுக்குள் மோதல் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறது.

பசி, பஞ்சம், வறுமை, நோய் அதிகரிப்பு போன்றவை ஏற்படும். சாலை போக்குவரத்து தடைகளால் பொருளாதார மந்த நிலை இன்னும் மோசமாகும். இது உலக அளவில் விநியோக சங்கிலியை முறித்துவிடும்.

பசி, பட்டினி போன்றவற்றால் மக்களிடையே மோதல் ஏற்பட்டு அது கொந்தளிப்புகளையும் உருவாக்குவதற்கு வாய்ப்பு உள்ளது. அது கட்டுப்படுத்த முடியாத நிலைக்கும் செல்லலாம். - இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# இந்தோனேசியாவில் பரவுவது மாறுபட்ட கொரோனா வைரஸ்

இந்தோனேசியா, மே 10

இந்தோனேசியாவில் பரவி வரும் கொரோனா வைரஸின் வகை மற்ற நாடுகளிடமிருந்து மாறுபட்டு இருப்பதாக அந்த நாட்டு அரசு கூறியுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தீவிரமாக பரவி வருகிறது. தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேசியாவிலும் இதன் தாக்கம் அதிகரித்து வருகிறது. அங்கு கொரோனா வைரஸால் சுமார் 12 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 800க்கும் அதிகமானோர் உயிரிழந்து உள்ளனர்.

இந்தோனேசியாவில் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ், மற்ற நாடுகளில் பரவி வரும் வைரஸிடமிருந்து மாறுபட்டு இருப்பதாக அந்த நாட்டு அரசு தகவல் தெரிவித்து உள்ளது. அங்கு பரவி வரும் கொரோனா வைரஸின் மரபணுக்களை ஆய்வு செய்ததில் இது தெரியவந்துள்ளது.

ஆய்வுகளின் அடிப்படையில் இதுவரை 3 விதமாக கொரோனா வைரஸ் உருமாறியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் இந்தோனேசியாவிலிருந்து ஆய்வுக்கு அனுப்பப்பட்ட வைரஸின் மாதிரிகள் இதுவரை கண்டறியப்படாத வகைகளில் ஒன்றாகும். எனினும் இவை வைரஸின் உருமாற்றம் மற்றும் தடுப்பூசி குறித்து ஆய்வு செய்து வரும் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவிகரமாக அமையும் என்று இந்தோனேசிய ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பாம்பங் பிராட்ஜோங்கொரோ தெரிவித்தார்.

இந்தோனேசிய தீவுக்கூட்டங்களில் பரவி வரும் கொரோனா வைரசின் மாதிரிகள் ஜெர்மனியில் உள்ள ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் இன்று அதிகாலை நிலநடுக்கம்!



ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இன்று அதிகாலை சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி 60 வயது முதியவர் உள்பட 2 பேர் உயிரிழந்தனர். 22 பேர் படுகாயம் அடைந்தனர்.

தலைநகரில் இருந்து 69 கி.மீ. தொலைவில் உள்ள தமாவாண்ட் நகரில் அதிகாலையில் ஏற்பட்ட இந்த நில நடுக்கம். ரிக்டர் அளவுகோலில் 5.1 புள்ளிகளாக பதிவானது.

இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 7 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக ஈரான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கம் தெஹ்ரானிலும் உணரப்பட்டது. வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின. இதனால் வீடுகளுக்குள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த மக்கள் திடுக்கிட்டு எழுந்தனர். பின்னர் அவர்கள் அலறியடித்த படி வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

# நச்சு வாயு கசிவு இறப்புக்கள் 12 ஆக உயர்வு 125 கோடி ரூபாய் அபராதம் நிறுவனத்திற்கு

இந்தியாவின் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நச்சு வாயு கசிவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது. இந்தப் பேரிடருக்குக் காரணமான தென்கொரிய இரசாயன ஆலைக்கு ரூ.125 கோடி அபராதம் விதித்து தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே உள்ள ஆர்.ஆர்.வெங்கடாபுரம் கிராமத்தில் எல்.ஜி. பாலிமர்ஸ் என்ற ரசாயன தொழிற்சாலையில் நேற்று முன்தினம் அதிகாலை நச்சு வாயு கசிவு ஏற்பட்டது.

தொழிற்சாலையை சுற்றியுள்ள 5 கி.மீ. கிராமங்களுக்கு நச்சு வாயு பரவியது. இதனால் வீடுகளில் தூங்கி கொண்டிருந்தவர்கள், சாலையில் நடந்து சென்றவர்கள் நச்சு வாயுயைச் சுவாசித்ததால் மயங்கி விழுந்தனர்.

சுமார் 1000க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர். இந்த நச்சு வாயுக் கசிவால் குழந்தை உள்பட 12 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

நச்சு வாயு கசிவு காரணமாக கிராமங்களில் இருந்து சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.



இந்நிலையில் விசாகப்பட்டினம் தொழிற்சாலை வாயு கசிவு சம்பவம் குறித்து தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த அறிக்கையின் மீது தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் நேற்று முன்தினம் விசாரணை நடந்தது.

இதன் பின்னர் தீர்ப்பாயம் எல்.ஜி. பாலிமர்ஸ் இரசாயன தொழிற்சாலைக்கு ரூ.125 கோடி அபராதம் விதித்தது. மேலும் விசாரணை குழு ஒன்றையும் அமைத்துள்ளது.

இந்த குழுவினர் தங்களது அறிக்கையை வருகிற 18ஆம் திகதிக்குள் சமர்பிக்கவேண்டும் என்றும், நச்சு வாயு எவ்வாறு கசிந்தது? விபத்துக்கு யார் காரணம் என்பதை விளக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

மேலும் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தலைவரான நீதிபதி ஆதர்ஷ்குமார் கோயல் தனது உத்தரவில் விதிகள் மற்றும் பிற சட்ட விதிகள் பின்பற்றப்படவில்லை என்று தெரிகிறது. இவ்வளவு பெரிய அளவிலான வாயு கசிவு மக்களின் ஆரோக்கியத்தையும், சுற்றுச்சூழலையும் கடுமையாகப் பாதித்துள்ளது.

ரூ.125 கோடி அபராத ஆரம்ப தொகையை விசாகப்பட்டினம் மாவட்ட நீதிவான் மன்றில் எல்.ஜி. பாலிமர் நிறுவனம் வைப்பிலிடுமாறு உத்தரவிட்டார்.

மேலும் இந்த விவகாரம் தொடர்பாக மத்திய அரசும், எல்.ஜி. பாலிமர்ஸ் நிறுவனமும் பதிலளிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

## தமிழ்நாடு காவல்துறையினர் 107 பேருக்கு கொரோனா!

தமிழகம் முழுவதும் காவல்துறையை சேர்ந்த 107 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொரோனா தொற்று தீவிரம் அடைந்து வருகிறது. ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்திப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வரும் காவல்துறையினர் பலருக்கும் வைரஸ் பரவி உள்ளது.

இந்த நிலையில் தமிழகம் முழுவதும் காவல் துறையை சேர்ந்த 107 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. சென்னையில் மட்டும் காவல்துறை, தீயணைப்புத்துறையை சேர்ந்த 85 பேருக்கு இதுவரை கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தீயணைப்புத்துறையில் இதுவரை 21 பேருக்கு கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

தமிழகத்தில் காவல்துறை, தீயணைப்புத் துறையைச் சேர்ந மொத்தம் 128 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளூரில் காவல்துறை, தீயணைப்புத் துறையைச்சேர்ந்த 12 பேருக்கு இதுவரை கொரோனா பாதிப்பு இருப்பது தெரிய வந்துள்ளது. மதுரையில் காவல்துறை, தீயணைப்புத்துறையைச் சேர்ந்த 5 பேருக்கும் கோவையில் காவல்துறை சேர்ந்த 7 பேருக்கும் இதுவரை கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

## தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் 526 பேருக்கு கொரோனாத் தொற்று

தமிழகத்தில்நேற்று ஒரேநாளில் 526 பேருக்கு புதிதாக கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் தமிழகத்திலும் வேகமாகப் பரவி வருகிறது. இந்தக் கொடிய வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு



நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆனாலும், கொரோனாவின் தாக்கம் மாநிலத்தில் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது.

வெள்ளிக்கிழமை நிலவரப்படி தமிழகத்தில் 6 ஆயிரத்து 9 பேருக்கு வைரஸ் பரவி இருந்தது. வைரஸ் பாதிப்பில் இருந்து ஆயிரத்து 605 பேர் குணமடைந்திருந்தனர். மேலும், வைரசுக்கு 40 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், தமிழகத்தில் நேற்றைய கொரோனா நிலவரம் குறித்து மாநில சுகாதாரத்துறை தகவல் வெளியிட்டுள்ளது.

அதன்படி, தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் 526 பேருக்கு புதிதாக வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் மாநிலம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியவர்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 535 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், வைரஸ் பரவியவர்களில் ஆயிரத்து 824 பேர் சிகிச்சைக்கு பின் குணமடைந்துள்ளனர். கொரோனா தாக்குதலுக்கு நேற்று 4 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் மாநிலத்தில் இறப்பு எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது.

## இந்தியாவில் கொரோனா ஜூலையில் உச்சம் பெறும்

### உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு

இந்தியாவை பொறுத்த வரை கொரோனாவின் பாதிப்பு ஜூலை மாதம் இறுதியில் உச்சத்தை எட்டும் என உலக சுகாதார அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனாவின் பாதிப்பு மே மாதத்தில் உச்சத்தை எட்டி பின்னர் படிப்படியாக குறையும் என்று நிபுணர்கள் முன்பு கணித்து இருந்தனர். ஆனால், ஜூலைமாதம்தான் உச்சத்தை எட்டி பின்னர் குறையும் என்று உலக சுகாதார நிறுவனத்தின் சிறப்பு தூதர் டேவிட் நபாரோ கூறியுள்ளார்.

இந்தியாவில் கொரோனா தாக்கம் அதிகமாக இருப்பதாக தெரிந்தாலும் இந்தியாவில் மக்கள் தொகையை ஒப்பிடும் போது, இது குறைவான எண்ணிக்கையாகவே கருதப்படுகிறது.

இந்தியாவில் மக்கள் நெருக்கமாக வாழ்வதால் தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமானது.

ஆனாலும், இதன் பரவல் குறைந்து வருகிறது. நோய்பரவல் இருமடங்கு ஆவது 11 நாட்களாக நீடித்து இருக்கிறது.

பொது முடக்கம் காரணமாக நோயை ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் சுருக்கி விட்டார்கள்.

இந்தியாவை பொறுத்த வரை ஜூலை மாதம் இறுதியில் இதன் தாக்கம் உச்சத்தை எட்டும் என எதிர்பார்க்கிறோம். அதன் பிறகு கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும்.

வயதானவர்களை கொண்ட நாடுகளில் அதிக உயிர் இழப்பு உள்ளது. இந்தியாவை பொறுத்த வரையில் பலதரப்பட்ட வயதான மக்கள் இருக்கிறார்கள்.

இதனால் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது, இந்தியாவில் இறப்பு விகிதம் குறைவாகவே உள்ளது.

## இந்திய உள்துறை அமைச்சர் குறித்து வதந்தியைப் பரப்பிய நால்வர் கைது

நல்ல தேகாரோக்கியத்துடன் உள்ள இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் உடல்நிலை குறித்து சமூக வலைதளத்தில் வதந்தி பரப்பினார்கள் என்கிற குற்றச்சாட்டில் 4 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் அதிகாரப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியான செய்தி போன்று ஸ்கீரின் ஷொட் ஒன்று சமூக வலைதளத்தில் வேகமாகப் பரவி வந்தது.

அந்த ஸ்கீரின் ஷொட்டில், தனக்கு எலும்பு புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாகவும் அதனால் நாட்டிற்கு சேவை செய்ய முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், தனது உடல் நலம் சீரடைய மக்கள் பிரார்த்தனை செய்யும் படியும் டிவிட்டர் ஸ்கீரின் ஷொட்டில் எழுதப்பட்டிருந்தது.

இந்தப் பதிவு சமூக வலைதளத்தில் வேகமாகப் பரவியது. மேலும், நாட்டின் பல்வேறு தரப்பினரும் இந்தத் தகவலின் உண்மைத்தன்மை குறித்து கேள்வி எழுப்பிய வண்ணம் இருந்தனர்.

இதற்கிடையில், தனக்கு நோய் பரவியுள்ளதாகவும், உடல் நிலை மோசமாக உள்ளதாகவும் சமூகவலைதளத்தில் பரவி வந்த செய்திக்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா நேற்று முற்றுப் புள்ளி வைத்துள்ளார். அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று வெளியிட்டுள்ள பதிவில்,

"எனக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது என பரவி வரும் தகவல் போலியானது.. நான் எந்த வித நோயாலும் பாதிக்கப்படவில்லை, பூரண உடல்நலத்துடன் இருக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அமித்ஷாவின் பெயரிலான டுவிட்டர் கணக்கில் இருந்து வெளியான டுவிட்டை போன்று போலியான ஸ்கீரின் ஷாட்டை சமூகவலைதளத்தில் பரவ விட்டனர் என்ற குற்றச்சாட்டில் 4 பேரை குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 4 பேரிடமும் இந்த போலி டுவிட் தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

# கருவிலே சுமந்து உயிர் ஈந்த அன்னை

## அவள்தான் குடும்பத்தின் திருவிளக்கு

## இன்று உலக அன்னையர் தினம்



பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்
சமூகவியல் துறை, மூன்றாம் வருடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.


உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு வருடமும் மே மாதம் வருகின்ற இரண்டாவது ஞாயிறு அன்னையர் தினமாக கொண்டாடப்படுகின்றது. நாம் நேரில் காண்கின்ற ஒரே ஒரு தெய்வம் எம் அன்னையே. எம்மை இந்த உலகிற்கு கொண்டு வந்தவர் எம் அன்னை. அவருக்கு மதிப்பளித்து, வயது சென்றாலும் அன்போடு அரவணைத்து நடத்த வேண்டும் என்பதை அனைவருக்கும் உணர்த்தும் விதமாக ஒவ்வொரு வருடமும் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த நாளை எம் வாழ்வில் யாராலும் மறக்க முடியாது. ஈரைந்து மாதங்கள் கருவிலே எம்மைச் சுமந்து நல்லபடியாக உலகத்தை காணச்செய்த அன்னைக்கு மகத்துவத்தையும், மதிப்பையும் கொடுக்கும் நாளாகத்தான் நாம் யாவரும் இந்த நாளை நினைவுகூர வேண்டும்.

அன்னையர் தினமானது முதன் முதலில் அமெரிக்காவின் மேற்கு வேர்ஜீனியாவின் கிராப்டன் நகரில்தான் கொண்டாடப்பட்டது.

இந்தத் தினம் பண்டைய காலத்தில் இருந்து கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றது. குறிப்பாகச் சொன்னால் கிரேக்கர்களும், உரோமர்களும் வசந்த கால கொண்டாட்டத்தில் தாயை தெய்வமாக மதித்து வணங்கிக் கொண்டாடுகின்ற வழமை ஆரம்ப காலத்தில் காணப்பட்டது.

இருப்பினும் முறையாக அன்னையர் தினம் தோன்றுவதற்கு அமெரிக்காவின் மேற்கு வேர்ஜீனியாவின் கிராப்டன் நகரத்தில் வாழ்ந்து வந்த அனா ஜார்விஸ் என்ற பெண்ணே காரணமாய்



“ பிள்ளைப் பிரசவம் மறுஜென்மம்தான். அதனால் தான் குழந்தை பெற்ற தாயைப் பார்த்து ‘பெற்றாயோ? பிழைத்தாயோ?’ என்று கேட்கும் வழக்கம் நம் மத்தியில் இருந்தது.

இருந்தவர். இவரது தாயான ஜார்விஸ் என்பவர் அமெரிக்காவில் நடந்த போர் ஒன்றில் பலியாகிய அமெரிக்க வீரர்களின் குடும்பங்களின் நல்வாழ்க்கைக்காக தம்மை அர்ப்பணித்து அவர்களின் நலனிற்காக தம்மால் இயன்ற உதவிகளை செய்து வந்தார். இவ்வாறு செய்த வந்த இவர் 1904 ஆம் ஆண்டு இவ்வுலகை விட்டுப்பிரிந்தார்.

இவ்வாறு தனது தாய் இறந்த நிலையில் அனா ஜார்விஸ் என்பவர் தாயின் நினைவாக மே மாதத்தில் ஓர் ஞாயிற்றுக் கிழமையன்று தனது தாயை நினைவுகூர்ந்து வழிபாடுகளை செய்து கொண்டு வந்தார். காலப்போக்கில் தன் தாயின் நினைவாகவும், ஒவ்வொரு வீடுகளிலும் உள்ள அன்னையர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை இவருக்கு ஏற்பட்டது. இவ்வாறு தனக்கு தோன்றிய எண்ணத்தை பென்சில்வேனியா மாநில அரசுக்கு தெரிவித்திருந்தார். அவரது கருத்தினை அந்த மாநில அரச ஏற்றுக்கொண்டு 1931 ஆம் ஆண்டு முதல் அன்னையர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என அறிவித்திருந்தது.

இவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்தாலும், தனது எண்ணம் பூரணமாக திருப்தி அடையாத காரணத்தினால் அமெரிக்கா முழுவதும் அன்னையர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்று அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த வூட்ரோ வில்சன் என்பவருக்கு இந்த வேண்டுகோளை முன்வைத்திருந்தார். இவரின் கருத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த வூட்ரோ வில்சன் 1914 ஆம் ஆண்டு உத்தியோக பூர்வ அறிவிப்பை வெளியிட்டு இருந்தார். 1914 ஆம் ஆண்டில் இருந்து வருடம்தோறும் மே மாதம் வருகின்ற ஒவ்வொரு இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையும் அன்னையர் தினமாகவும், அன்றைய நாள் விடுமுறை தினமாகவும் கருதப்பட வேண்டும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். இவ்வாறு அமெரிக்காவில் தோன்றி இன்று உலகம் முழுவதும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு பெண்ணும் இருமுறை பிறக்கின்றாள் என்று கூறலாம். அந்தவகையில் முதலாவது பெற்றோருக்கு மகளாகப் பிறப்பது, இரண்டாவது அந்த பெண்ணின் வயிற்றில் ஒரு குழந்தையை சுமந்து அக் குழந்தை பிரசவிக்கும் போது அவள் மீண்டும் ஒரு முறை மறுஜென்மம் எடுக்கிறாள். தனது வயிற்றிலே கருவினைச் சுமந்து ஒன்பது மாதங்கள் பூரணமாகி பத்தாவது மாதம் தனது குழந்தையை பிரசவிக்கும் போது தனது வாழ்க்கையில் அதிக வேதனையையும். வலிகளையும் சந்தித்து குழந்தையின் அழுகை சத்தம் கேட்ட பின்னர் அவள் தான் பட்ட வலிகளையும், வேதனையையும் மறந்து போகிறாள்.



பிள்ளைப் பிரசவம் மறுஜென்மம்தான். அதனால் தான் குழந்தை பெற்ற தாயைப் பார்த்து ’பெற்றாயோ? பிழைத்தாயோ?’ என்று கேட்கும் வழக்கம் நம் மத்தியில் இருந்தது.

இவ்வாறு தான் பெற்ற சிசுவை கண்ணும் கருத்துமாக பாதுகாத்து, அக் குழந்தை வளரும்வரை மிகுந்த சிரமத்தை சந்திக்கிறாள். இவ்வாறு குழந்தைக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்து தங்கள் உடல் நலனை கருத்தில் கொண்டு செயற்படாத காரணத்தினால் இளவயதிலேயே உடல் பருமன், மூட்டுவலி மற்றும் ஏனைய நோய்களுக்கு உள்ளாகின்றாள். தனது பிள்ளையின் வாழ்க்கைக்காக வாழ்கின்றோம் என எண்ணி தனது நலனை கருத்தில் கொள்ளாமல் செயற்படும் ஒவ்வொரு அன்னையும் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு மிக முக்கிய விடயம் என்னவெனில், தமக்கு ஏதாவது ஒன்று நடந்தால் தமது பிள்ளையை யார் பார்ப்பது என்பதே. ஆகவே தனது நலனை கருத்தில் கொண்டால்தான் தனது பிள்ளையை நாம் சிறப்பாக பராமரிக்க முடியும் என்பதை கருத்தில் கொண்டு செயற்படுவது ஒவ்வொரு அன்னையினதும் மிக முக்கிய கடமையாகும்.



(08 பக்கம் பார்க்க)

# பாடசாலை ஆரம்பம் குறித்து அடுத்த வாரதில் முடிவாகுமாம்



கொழும்பு, மே 10

அரசாங்கப் பாடசாலைகள் மே மாதம் 11 ஆம் திகதி திறக்கப்படுமென அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தபோதிலும், நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, பாடசாலை கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான சரியான திகதி அடுத்தவாரம் அறிவிக்கப்படுமென, கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

சுகாதாரப் பிரிவின் வழிகாட்டலுக்கமையவே, தீர்மானம் மேற்கொள்ளப்படுமென அமைச்சர் தெரிவித்துள்ளமையுடன், மூன்று கட்டங்களின் அடிப்படையில் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## கருவிலே சுமந்து உயிர் ஈந்த அன்னை .............

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பத்தினை கொண்டு வழிநடத்துகின்ற ஓர் அச்சாணியாக அன்னையே காணப்படுகின்றாள். தந்தையானவர் சம்பாதித்துக் கொடுப்பதைக் கொண்டு தமது பிள்ளைகளையும், குடும்ப காரியங்களையும், குடும்பப் பொறுப்புக்களை கொண்டு வழிநடத்துகின்ற ஆணிவேராக தாயானவள் திகழ்கின்றாள். அன்னையின் வளர்ப்பு என்பது மிக முக்கியமான விடயமாகும். ஒரு பிள்ளை நல்லவராகவும், தீயவராகவும் இவ்வுலகில் திகழ்வது அன்னையின் வளர்ப்பைப் பொறுத்துதான் என்று கூறுவார்கள். சமூதாயத்திற்கு ஒருவரை நல்லவராக மாற்றி, சிறந்த பிரஜையாக வழங்குவதற்கான பொறுப்பினை அன்னையே ஏற்றுக்கொள்கின்றாள்.

குறிப்பாகச் சொல்லப்போனால் இன்றைய கொரோனாத் தொற்று பரவி வருகின்ற சூழ்நிலையில் பல்வேறு இக்கட்டான நிலைக்கு மத்தியில் குடும்பத்தைப் பற்றி சிந்தித்து கரிசனை கொள்கின்ற ஒரே ஒரு ஜீவன் அன்னை என்று கூறலாம். நாட்டில் தொற்று நோய் அதிகரித்துக் கொண்டுவரும் சூழ்நிலையில் குடும்பத்திற்கு எந்தப் பாதிப்பும் வராமல் பாதுகாப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதனைக் காணலாம். எனது குடும்பத்திற்கு எந்த பாதிப்பும் வந்துவிடுமோ, பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுமோ, பிள்ளைகள் பரீட்சைகளில் தோற்றி சித்தியடைவார்களா, பிள்ளைகளுடைய தேவைகளை எவ்வாறு நிறைவேற்றப் போகின்றேன், எப்போது நிலைமை சரியாக வரப்போகிறது, வெளிநாட்டில் பிள்ளைகள் இருந்தால் எனது பிள்ளை அந்த நாட்டில் எப்படி இருக்கின்றது, நேரத்திற்கு சாப்பிடுகிறதா, எப்போது எனது பிள்ளை என்னிடம் வந்து சேரப்போகிறது என பல கேள்விகளுக்கு மத்தியில் அன்னையே காணப்படுகின்றாள்.

இவ்வாறு அன்னையானவள் தனது ஆயுசின் நாட்களை தமது குடும்பத்திற்காகவே செலவளித்து, குடும்பத்திற்காகவே தம்மை அர்ப்பணிக்கிறாள். அவ்வாறான அன்னையை நாம் மதித்துப் போற்ற வேண்டியது அவசியமாகும். இன்றைய நவீன சமூதாயத்தை பார்க்கும் போது அன்னையை மதித்து நடக்கின்றோமா என்பதை சற்று சிந்தித்து பார்க்க வேண்டும்.

நவீனமயமான உலகில் அன்னைக்கு கொடுக்க வேண்டிய மதிப்பையும், மரியாதையையும் செலுத்த வேண்டும். நாம் வளர்ந்து விட்டோம், நன்றாக சம்பாதிக்கின்றோம், நாம் எமது சொந்தக்காலில் நிற்கின்றோம், இனி எமக்கு அன்னையின் துணை தேவையில்லை என்ற எண்ணத்தினை எம் வாழ்வில் இருந்து முற்றாக நீக்கிவிடவேண்டும். நாம் இந்த நிலைமைக்கு வரக் காரணம் யார் என்று சற்று சிந்தித்துப் பார்த்தால் இவ்வாறு நாம் எவரும் யோசிக்கவே மாட்டோம்.

இன்றைய சமுதாயத்தினை எடுத்துக் கொண்டால் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானோர் அன்னையை மதிக்காத சூழ்நிலைதான் காணப்படுகின்றது. வயது சென்ற நிலையில் அன்னையானவள் காணப்படுகின்ற போது அவளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அவளுடைய கருத்தினை ஒரு பொருட்டாக எண்ணாத சமூகத்தினையே நாம் காண்கின்றோம். எந்தவொரு முடிவு எடுப்பதாய் இருந்தாலும் அன்னையின் கருத்தினை புறந்தள்ளி விட்டு பலர் சுயமாக மற்றும் ஏனைய நபர்களோடு கலந்தாலோசித்து முடிவினை எடுக்கின்றனர். இவ்வாறான நிலையில் ஒரு அன்னையின் மனம் பாதிக்கப்படும் அவலத்தை சொல்வதற்கு வார்த்தையே இல்லை. என்னுடைய கருத்திற்கு மதிப்பில்லையே, என்னை ஒரு பொருட்டாக யாரும் கருதவில்லையே, என்னை புறக்கணிக்கிறார்களே என பலவாறாக சிந்தித்து மனதளவில் உடைந்து போகின்றாள்.

இதேபோன்று இன்னும் சில போலி நபர்களையும் நாம் பார்கின்றோம். வெளி உலகத்திற்காக வேண்டி அன்னையை மதிப்பது போல் நடகமாடுகிறார்கள். தாயை மதிக்காத மற்றும் அரவணைக்காத நிலையினை யாராவது பார்த்து நம்மை இழிவாக பேசுவார்கள், இவ்வாறு எவரும் தம்மை இழிவாக நினைக்கக்கூடாது என்பதற்காகவும் சிலர் போலியாக செயற்படுகின்றனர். பசுத்தோல் போர்த்திய புலி போல வெளியார் பார்க்கும் போது அன்னையை பார்க்கும் விதம் ஒரு விதமாகவும், வீட்டிற்குள் ஒருவிதமாகவும் வேடம் தரிக்கின்றனர்.

மேலும் தாயானவள் சுகவீனமுற்று காணப்படும் போது சரியாக பராமரிக்காத நபர்களையும் நம் சமூகத்தில் காணமுடிகிறது. வயதுசென்ற நிலையில் காணப்படும் போது நோயுறுவது வழமையான செயலாகும். இவ்வாறான நிலையில்தான் நேரத்திற்கு உணவு கொடுத்து, மருந்து மாத்திரைகள் கொடுத்து, நல்ல உடை அணிவித்து கவலைப்படாமல் சந்தோசமாக வைத்து பராமரிக்க வேண்டும். ஆனால் இன்று பார்க்கும் போது தாயை பார்ப்பதற்காகவே வீடுகளில் பணியாளர்களை அமர்த்துகின்றனர். கடைசி வரைக்கும் தாயை வைத்து பராமரிக்கும் பாக்கியம் எமக்கு கிடைத்திருக்கின்றது என்று நினைப்பவர்கள் இவ்வாறு நடந்துகொள்ள மாட்டார்கள். வேலைப்பழு காரணமாகத்தான் இவ்வாறு பணியாளர்களை வைத்து பராமரிக்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் வேலைநேரம் முடித்து விட்டுவந்து அன்னையை பார்க்காத சில நபர்களையும் நாம் சமூகத்தில் காணுவது கவலையளிக்கின்றது. சிலர் முதியோர் இல்லங்களில் கொண்டு விடுகின்றனர். இதனால் ஒவ்வொரு அன்னையும் மனதளவில் பாதிக்கப்படுகின்றனர். எனது பிள்ளைகள் என்னை இவ்வாறு அனாதையாக கைவிட்டுவிட்டு விட்டார் களே, நான்இனிஎன்னவாழவேண்டும் என நினைத்து சிலர் தவறான முடிவுகளினை எடுக்கின்றனர். கடைசி சொற்ப காலத்தில் எம் அன்னையை பார்ப்பதற்கு சிரமப்படுகின் றோமே என்று நினைப்பவர் கள் இவ்வளவு காலம் எம்மை பராமரிப்பதற்கு தாயானவள் என்ன பாடுபட்டிருப்பாள் என்பதை சற்று சிந்தித்து செயற்பட வேண்டும்.

உலகிலே உள்ள உண்மையான மற்றும் புனிதமான அன்பு அன்னையின் அன்பு மட்டுமேயாகும். தாயை விட எம்மிடம் யாரும் அன்பு காட்ட முடியாது. அந்தளவிற்கு எந்தவிதமான கைமாறும் இல்லாத தூய்மையான அன் பினை அன்னையால் மட்டுமே நமக்குத் தர முடியும். காதலனையோ அல்லது காதலியையோ அல்லது வேறு எந்த நபர்களையோ பார்த்து நான் உம்மிடம் உண்மையாக அன்பு செலுத்துகிறேன் என்று கூறினாலும் இந்த வார்த்தையை எம் அன்னைக்கு ஒருமுறையாவது சொல்லியிருக்கிறோமா? நீங்கள் ஒருமுறை தாயைப்பா ர்த்து இந்த வார்த்தையை சொல லிப்பாருங்கள். அவளது மகிழ்ச்சி எல்லையற்றதாக இருக்கும்.

எனவே அன்னையர் தினமான இன்று வெளியுலகிற்காக சமூக வலைத்தளங்களில் அம்மாவைப் பற்றிய கவிதைகளையும், பாடல்களையும், சிந்தனைகளையும் பகிர்ந்து கொள்வது உண்மையான அன்போடும் பாசத்துடனுமா என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். இன்று மட்டும் எனது அம்மாவிற்கு வாழ்த்துக்கள் என்று கூறி விட்டுச் செல்லக்கூடாது. எம் வாழ்நாள் முழுவதும் தாயிடம் அன்பாக நடந்து கொண்டு, கொடுக்க வேண்டிய மதிப்பு மரியாதையையும் கொடுத்து, எம்மை ஈன்றெடுத்த தெய்வமாக தாயை கருதி அவருடைய கருத்துக்களை புறக்கணியாது ஏற்றுக் கொண்டு அன்பு செய்வதே நாம் எமது அம்மாவிற்கு கொடுக்கும் மிகப்பெரிய அன்னையர் தின பரிசாகும்.

அம்மா என்ற பதம் வெறுமனே மனிதனுக்கு மட்டும் சொந்தமுடையதல்ல. அது அனைத்து உயிரிகளுக்கும் சொந்தமான ஒரு பதமாகும். அன்னையர் தினமான இன்று தாயினுடைய விருப்பங்கள் என்ன என்பதை கேட்டு அதை நிறைவேற்றுவது எம் அனைவரினதும் பொறுப்பாகும். ஆகவே என்னையும் இவ்வுலகில் கொண்டுவந்த எனது அம்மாவிற்கும், உலகில் வாழுகின்ற, நாம் நேரில் கண்ட அனைத்து தாய் தெய்வங்களுக்கும் அன்னையர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வோம்.






# ஊரடங்கில் வீதி மரக் கன்றுகளின் பாதுகாப்புக் கூடுகளைத் திருடியவர்

## சம்மாந்துறையில் சம்பவம்





வீதியில் நடப்பட்ட மரக்கன்றுகளின் பாதுகாப்பிற்காக போடப்பட்ட மரக் கூடுகளை ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருந்த வேளை திருடி சென்றவரை சம்மாந்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையின் தேசிய மர நடுகை செயல் திட்டத்திற்கமைய சம்மாந்துறை பிரதேசத்தின் வங்கலாவடி தொடக்கம் மல்வத்தை பிரதேசம் வரையான அரச நிறுவனங்களின் பிரதானிகள் ஊடாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாட்டப்பட்ட மரங்களின் பாதுகாப்பிற்காக மரக் கூட்டுத்தாபனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட பாதுகாப்புக் கூடுகள் திருடப்பட்டுள்ளன என கல்முனைப் பிராந்திய வனப் பரிபாலனை திணைக்களத்தின் உத்தியோகத்தர் மற்றும் பௌதீக வள அதிகாரியினால் முறைப்பாடு ஒன்று சம்மாந்துறை பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எச். ஜயலத்தின் வழிகாட்டலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய சிறு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஏ.எமு. நௌபீர் தலைமையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் நவகீதன் உள்ளிட்ட குழுவினர் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் ஊரடங்கு நேரத்தில் சட்டத்தினை மீறி குறித்த மரக்கூடுகளை திருடி தன்னுடைய உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 56 வயதுடைய சந்தேக நபர் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவிருந்தார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# டிக்கோயா மணிக்கவத்தையில் 7 வீடுகள் முற்றாக எரிந்து நாசம்

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டிக்கோயா மணிக்கவத்தை 3 ஆம் பிரிவுத் தோட்டத்தில் 20 வீடுகளைக்கொண்ட நெடுங்குடியிருப்பில் நேற்று மதியம் 1 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 7 வீடுகள் முற்றாக எரிந்து தீக்கிரையாகின. இதனால் 89 இற்கும் மேற்பட்டவர்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

இவர்களைச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உரிய இடமொன்றில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

ஊரடங்கால் மக்கள் வீட்டுக்குள் இருக்கையில் திடீர் தீபரவல் ஏற்பட்டதால் மக்கள் பதறியடித்துக் கொண்டு பாதுகாப்பான இடத்துக்கு ஓடிவந்தனர்.

இதனையடுத்து பிரதேச மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினர்.

இதற்கிடையில் அப்பகுதியில் மக்கள் குவிந்ததால், சமூக இடைவெளியை பின்பற்றி உரிய வகையில் இருக்குமாறு பொலிஸாரால் அறிவிக்கப்பட்டது.

இத்தீவிபத்தால் உயிர்சேதம் எதுவும் ஏற்படாதபோதிலும், பெருமளவில் பொருட் தேசங்கள் ஏற்பட்டுள்ளன.

வீட்டு உபகரணங்கள், முக்கிய ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர். ஒரு சில பொருள்கள் மாத்திரமே மக்களால் பாதுகாக்ககூடியதாக இருந்தது.

நோர்வூட் பிரதேச சபையின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு பொருட்கள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் தெரிவித்தார்.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்பபடவில்லை. பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.



யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656
கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# கொரோனாக் கிருமியால் துன்புறும் மனித குலத்தை அன்னை மரியாவிடம் ஒப்படைத்து 08 மே மன்றாட்டு



ஒவ்வோர் ஆண்டும் மே 8ஆம் திகதியன்று செபமாலை அன்னை மரியாவிடம் எழுப்பப்படும் சிறப்பு மன்றாட்டு, 2020ஆம் ஆண்டு உலகெங்கும் பரவியுள்ள கோவிட் 19 தொற்றுக் கிருமியால் துன்புறும் மனித குலத்தை அன்னை மரியாவிடம் ஒப்படைத்து மன்றாடப்பட்டது.

மரியன்னை மீதும் செபமாலை பக்தி மீதும் ஆழ்ந்த பற்று கொண்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த மே மாதம் முழுவதும் செபமாலை சொல்வதற்கு அழைப்பு விடுத்திருக்கின்றமை, மக்களுக்கு பெரும் ஆறுதலாகவும் தூண்டுதலாகவும் அமைந்துள்ளது என்று பேராயர் குறிப்பிட்டார்.

கடந்த சில மாதங்களாக முகநூல் போன்ற சமூக வலைத்தளங்கள் வழியே தொடர் செபமாலை என்ற ஒரு முயற்சி நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு நாளும் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறும் இந்த தொடர் செபமாலையில் ஒவ்வொருவரும் அவரவர் இல்லங்களில் இருந்த வண்ணம் அவர்களுக்கு வசதியான நேரத்தில் செபமாலை சொல்லி அதனை அடுத்தவருக்கு அனுப்பி அடுத்தவர் இந்த முயற்சியைத் தொடர வழிவகுத்து வருவது அழகான செயல்பாடு என்று கூறினார்.

## இரமதான் புனித மாதத்தைச் சிறப்பித்து வரும் முஸ்லிம்களை நோய் காலத்தில் தோழமையுணர்வைக் காட்டுமாறு அழைப்பு

இரமதான் புனித மாதத்தைச் சிறப்பித்து வரும் முஸ்லிம்கள் கோவிட் – 19 கொள்ளை நோய் காலத்தில் தோழமையுணர்வைக் காட்டுமாறு அழைப்பு விடுத்துள்ளார், திருப்பீட பல்சமய உரையாடல் அவை தலைவர் கர்தினால் ஏஞ்சல்.

இரமதான் மாதத்தை முன்னிட்டு உலகெங்கும் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தி குறித்து வத்திக்கான் செய்தித் துறைக்குப் பேட்டியளித்த கர்தினால் அவர்கள் கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் உயிர்ப்புப் பெரு விழா கொண்டாட்டங்கள் போன்று, நம் முஸ்லிம் நண்பர்களுக்கு இரமதான் விழா முக்கியமானது என்று கூறினார்.

இந்த கோவிட் –19 சமுதாய தனித்திருத்தல் காலத்தில், இந்த விழாவைக் குழுமமாகக் கொண்டாட இயலாது என்பதால் இவ்வாண்டு இந்த விழா தனிப்பட்டவரின் அகவாழ்வை அதிகம் சார்ந்துள்ளது என்று கூறிய கர்தினால் அவர்கள், கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் உடன்பிறந்த உணர்வில் ஒன்றித்திருந்து மனித சமுதாயத்திற்கு ஒருமைப்பாட்டுணர்வைக் காட்ட வேண்டும் என்று தான் விரும்புகிறார் எனக் கூறினார்.

வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்படுகின்ற அல்லது, அவை வன்முறைகளால் அச்சுறுத்தப்படுகின்ற ஒவ் வொரு நேரமும் அச்செயல் மதத்தின் போதனை களிலிருந்து விலகுவதாகவும் உலகளாவிய சட்டத்தை தெளிவாக மீறுவதாகவும் உள்ளது என்றும் கர்தினால் அவர்கள் எச்சரித்தார்.






காலைக்கதிர் Kalaikathir
## கிறிஸ்தவ செய்தி இதழ்

TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

# கொரோனா நெருக்கடிகளால் பாதிப்புற்றோருக்கு நிவாரணம்

*யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் கியுடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.இயுஜீன் பிரான்சிஸ் அடிகளார் யாழ்ப்பாணத்தில் 102 குடும்பங்களுக்கும் வன்னியில் 60 குடும்பங்களுக்கும் உலர் உணவு உதவிகளை வழங்கினார்.*

*இந்த உதவிக்கான நிதியை பேகின் நோர்வே நகர தமிழ்ச்சங்கம் வழங்கியதாக எஸ்.இயுஜீன் பிரான்சீஸ் அடிகளார் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்குத் தெரிவித்தார்.*

# கொரோனாவினால் இறந்த அருள்பணியாளர்களை நன்றி தெரிவித்து நினைவுகூர்ந்தார் திருத்தந்தை

வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவிலில் திருப்பலியை நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கொரோனாத் தொற்றுக்கிருமி நோயாளிகளுக்குப் பணியாற்றுகையில் உயிரிழந்த அறுபதுக்கும் அதிகமான அருள்பணியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர் போன்ற அனைவரையும் நினைவுகூர்ந்தார்.

பெயர் அறியப்படாத பல அருள்பணியாளர்களின் திருப்பணிக்கு நன்றி கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவர்களில் பலர் தங்கள் வாழ்வைத் தியாகம் செய்துள்ளனர். குறிப்பாக அண்மையில் மருத்துவமனைகளிலும் மருத்துவப் பராமரிப்பு இல்லங்களிலும் கொரோனா தொற்றுக்கிருமி நோயாளிகளுக்குச் சேவையாற்றுகையில் உயிரிழந்துள்ளனர் என்று கூறினார்.

2020ஆம் ஆண்டு புனித வியாழன் காலையில் திருத்தைலம் மந்திரிக்கும் திருப்பலியை நிறைவேற்ற இயலவில்லை. பெந்தக்கோஸ்து பெருவிழாவுக்குமுன் இத்திருப்பலி நிறைவேற்றப்படும் என்று தான் நம்புகிறார் என எடுத்துரைத்த திருத்தந்தை, இந்த ஆண்டவரின் இறுதி இரவு உணவு திருவழிபாட்டில் அருள்பணித்துவம் பற்றியும் ஆண்டவருக்குத் தங்கள் வாழ்வை ஈந்த அனைத்து அருள்பணியாளர்கள் பற்றியும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை என்று கூறினார்.

கொரோனா தொற்றுக்கிருமி பரவலால் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுவரும் இந்நாள்களில் இத்தாலியில் நோயாளிகளுக்குப் பணியாற்றுகையில் அந்நோய் தொற்றி மருத்துவமனைகளில் பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் பல அருள்பணியாளர்களும் உயிரிழந்துள்ளனர், இவர்கள் ஆண்டவருக்கும் விசுவாசிகளுக்கும் தொண்டாற்றுகையில் தங்கள் வாழ்வைக் கையளித்த நம் பக்கத்து வீட்டுப் புனிதர்கள் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

சிறிய நகரங்கள் மற்றும் சிறைகளில் நற்செய்திப் பணியாற்றும் பல பங்குத் தந்தையர் மற்றும் சிறைகளில் ஆன்மீகப் பணியாற்றும் அருள்பணியாளர்கள் பக்கம் என் நினைவு திரும்புகிறது என்ற திருத்தந்தை மறைப்பணித் தளங்களில் பல அருள்பணியாளர்கள் இறந்து அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் உலகின் கண்களிலிருந்து வெகு தொலைவில் உள்ளனர். இவர்களின் பெயர்கள் யாருக்குமே தெரியாது. இவர்கள் நல்ல அருள்பணியாளர்கள். இவர்களை என் இதயத்தில் ஏற்கிறேன் என்றும் கூறினார்.

கோவிட் –19க்கு பலியானவர்களுக்கு நிறைசாந்தி கிடைக்கசெபித்தார் திருத்தந்தை.

வத்திக்கானின் சாந்தா மார்த்தா இல்லத்திலுள்ள சிற்றாலயத்தில் 05 மே 2020 அன்று திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கொரோனா கிருமியால் உயிரிழந்தவர்களை நினைத்து அவர்களுக்கு இறைவன் நிறைசாந்தியை அளிக்குமாறு மன்றாடினார். இவர்கள் பல நேரங்களில் தனிமையிலும் தங்கள் உறவுகளின் அன்பில்லாத நிலையிலும் இறந்துள்ளனர். இவர்களில் பலருக்கு அடக்கச் சடங்குகள்கூட இடம்பெறவில்லை. ஆண்டவர் அவர்களை தன் மகிமையில் சேர்த்துக் கொள்வாராக என்று கூறி திருப்பலியைத் துவக்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அன்றைய திருப்பலியின் நற்செய்திப் பகுதியை மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் செல்வத்திற்கு அடிமையாதல், இறுக்கமான மனநிலை, தன்னையே எப்போதும் முன்னிலைப்படுத்தும் போக்கு, சோம்பல், உலகம்சார்ந்த மனநிலை போன்ற இயேசுவின் ஆடுகளாக நாம் வாழ்வதற்குத் தடையாக இருக்கும் சில எண்ணங்கள் பற்றி விளக்கினார். சுதந்திரமின்றி விசுவாசம் கிடையாது. சுதந்திரமின்றி இயேசுவை நோக்கி நம் வாழ்வை நடத்திச் செல்ல முடியாது என்பதையும் மறையுரையில் வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் சில நேரங்களில் சுதந்திரம் அளவுக்கு அதிகமாகச் செல்லக்கூடும். நாம் தடுக்கி விழக்கூடும் என்று கூறி தன் மறையுரையை நிறைவு செய்தார்.



# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்





படம் 1



படம் 2

**நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'மீன் தொட்டி' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'மேளக் கச்சேரி'

**படம் 1**
**டி. ஹரிஸ்மன் - தரம் 8**
**யா/ புனித பத்திரிசியார் கல்லூரி**

**படம் 2**
**றொபின்சன் ஷெர்வின் - தரம் 4**
**பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு**

த. கபிலாஷ்
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

பா. வாஹினி – தரம் 4
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

பா. தனுபன் – தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

டி. அபிலாஷ் – தரம் 10
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

எஸ். சிவசாகித்தியன் – தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

உ. ஆராதனா – தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ரோஷித் – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

இ. கார்த்திகன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

த. யதுனேஷ் – தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

ஜி. பவித்திரன் – தரம் 8
யா/ ஹாட்லிக் கல்லூரி

ஜி. வர்சிகா – தரம் 3
வல்வை அமெரிக்கன்மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை

பா. ஹரிஷ் – தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் – தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

எம். நஸீம் – தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். எல். எவ். பஸ்லுல்லாஹ் – தரம் 7
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். ஐ. எவ். ஹுமைரா – தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எவ். நஸ்மியா – தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

பாத்திமா ருகையா – தரம் 9
அல் – ஹஸனிய்யா மகா வித்தியாலயம், மக்கொன

அறிவுச்செல்வன் அறிவுஆதித்தன் – தரம் 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

மயூரன் தேனுகா – தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

அன்றியா தக்ஷரா காண்டீபன் – தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

என். எம். தாவுத் சராப் – தரம் 1
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

லீனா பர்ஹான்
கிட்ஸ்வே ஆரம்பப் பாடசாலை, கல்கமுவ

என். எம். எஸ். சதா – தரம் 5
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் – தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

தி. கோவெழிலன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. சிவயாளு – தரம் 7
யா/ இந்து மகளிர் கல்லூரி

லோ. நித்திலா – தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

கு. ஆதிகேசவன் – தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

இ. சிந்துரிகா – தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

சி. சிவகலை – தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

ரமேஷ் ரம்மியன் – தரம் 5
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

யதுஷி ரமேஷ் – தரம் 8
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

குமணதாசன் சாருஷன் – தரம் 10
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

இ. பவிஷான் – தரம் 3
யா/வதிரி வடக்கு மெபி. அ. த. க. பாடசாலை

செந்தூரன் அபிஷ்கன் – தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

உ. நிலக்ஷா – தரம் 6
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

திலகராஜ் திலக்சயன் – தரம் 5
உடுவில் மகளிர் கல்லூரி

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

வி. தனிஸ்ரன் – தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

ரங்கதாஸ் பவினேஷ் – தரம் 1
யா/ மகாஜனாக் கல்லூரி

ஐங்கரன் ஆரணி – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

டேவிட்ராஜ் பிலெஸ்ஷின் – தரம் 5
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

பிரபாகர் அபிஜித் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

பிரபாகர் மயூரி – தரம் 7
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# யாழ். மருத்துவ பீடத்தில் கொரோனா சோதனை

## அநாமதேயங்களுக்கு அப்பாற்பட்ட அர்ப்பணிப்பு!

தில்லையம்பலம் மனுதீரன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கொரோனா நோய் நிலைக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.



சர்வதேச ரீதியிலும், தேசிய மட்டத்திலும் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்திருக்கும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதில் எல்லா நாடுகளுமே கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டிலும் 'எபிடேமிக்' என்கிற நிலையைத் தாண்டி, அது 'பன்டமிக்' என்கிற நிலைக்கு (அதாவது உலகையே அச்சுறுத்தும் ஒரு கொடிய தொற்று நோய்) மாற்றம் பெற்றபோது அந்தந்த நாடுகளில் நிலைமையை எதிர்கொள்வதற்கான பொறிமுறைகள் உருவாக்கப்பட்டன.

தனித்தனியே நோயைக் கட்டுப்பாடுகள் கொண்டு வருவதற்கு நாடுகள் பாடுபட்டாலும், சர்வதேச ரீதியாக ஒரு நியமத்துக்குள் , உலக சுகாதார ஸ்தாபனத்தின் (World Health Organization) சர்வதேச பொறிமுறைகளுக்கு அமையவும் ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்த நிலை இலங்கைக்கு மட்டும் விதிவிலக்காகவில்லை. நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவது, நோயாளர்களை இனங்காண்பது மற்றும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது எனப் பல வழிகளிலும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி இலங்கையின் சுகாதார அமைச்சும், கொரோனா அச்சுறுத்தலுக்கு எதிரான செயலணியும் செயற்பட்டு வந்தன.



அந்த வகையில் நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும், நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இலங்கையில் சுகாதாரத்துறை அவ்வளவாகச் சவால்களை எதிர்கொண்டதாக இல்லை.

ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசு நேரடியாக தனது ஆள்பலத்தை ஈடுபடுத்தி, தன்னிடமுள்ள முழு வளங்களையும் ஒருங்கிணைத்து இந்தப் பணிகளை நிறைவேற்றி வருகிறது.

இலங்கைப் படையினர் இப்பணிகளில் ஈடுபட்டமை ஒரு விதத்தில் பரவலைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய காரணியாக இருந்தாலும், அதே படைகள் மத்தியில் நோய்ப் பரவத் தொடங்கியிருக்கின்றமை ஒரு வகையில் பின்னடைவே.



வேகமாகப் பரவி வந்த நோய் நிலைமையைக் கண்டறிவது என்பது இன்று வரை இலங்கைக்கு ஒரு சவாலான விடயமாகவே இருந்து வருகிறது.

யாழ்ப்பாணத்தில் மார்ச் மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக 'சுவிஸ் பாஸ்டருடன்' தொடர்பு பட்டிருந்த தாவடியைச் சேர்ந்த ஒருவர் 'கொரோனா' தொற்றாளராக அடையாளப்படுத்தப்பட்ட பின், குறிப்பிட்ட நபருடன் நெருங்கிப் பழகியவர்கள் உட்பட நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நபர்களைத் தேடி, இனங்கண்டு, அவர்களுக்கு நோய்த் தொற்று உண்டா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்தும் வரை பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

யாழ்ப்பாணத்தில் தொற்றபாயம் உள்ள பகுதிகளில் சந்தேகத்தின் பேரில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு நோய்ப் பரிசோதனை செய்யப்பட வேண்டும், அதே நேரத்தில் நோய்த் தொற்றபாயத்துடன் வடக்குக்கு வெளியேயிருந்து கொண்டு வரப்பட்டு, வடக்கில் பல தனிமைப்படுத்தல் நிலையங்களில் வைக்கப்பட்டிருப்பவர்களிடமும் நோய்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலை காணப்பட்டது.

வடக்கில் இதற்கான வசதிகள் எவையும் இல்லாத நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களோடு காணப்படுகின்ற யாழ்ப்பாணம் போதானா வைத்தியசாலை ஆளணியினரால் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அவை அநுராதபுரத்திலுள்ள ஆய்வு கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கிருந்து முடிவுகள் கிடைக்கும் வரை கிட்டத்தட்ட 3 நாள்கள் காத்திருந்து முடிவுகளைப் பெறவேண்டிய நிலைமை இருந்தது.

இந்த நிலையில், கொரோனா நோய்த் தொற்றை இனங்காண்பதற்கான பி.சீ.ஆர். சோதனைகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டால் என்ன என்ற சிந்தனை தோற்றம் பெறுகிறது.

சம நேரத்தில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அதன் தலைவரும், நாட்டிலுள்ள சகல மருத்துவ பீடங்களுக்கும் கொரோனா தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளில் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும் என்று வேண்டுகோளை முன்வைக்கின்றார்.

வடக்கில் நாளுக்கு நாள் சோதனைக்கு உட்படுத்த வேண்டியவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும், சோதனைகளை இங்கேயே செய்ய முடியாமல் அநுராதபுரத்தில் இருந்து ஆய்வு முடிவுகள் வரும் வரை காத்திருக்க வேண்டிய துர்பாக்கிய நிலைமையும் காணப்பட்டதனால், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் வேண்டுகோள் யாழ்ப்பாண போதனா வைத்திய சாலைப் பணிப்பாளரின் நெஞ்சில் பால் வார்த்தது போல் அமைந்து விட்டது.

உடனடியாக களத்தில் இறங்கிய வைத்தியசாலைப் பணிப்பாளர், யாழ் பல்கலைக்கழக மருத்தவ பீடாதிபதியுடன் தொடர்புகொண்டு தன் எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

நாட்டிலுள்ள அநேகமாக இடங்களில் மருத்துவ பீடங்களிலேயே பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்படுவதனால், இதனைச் செய்வதில் தமக்கேதும் ஆட்சேபனைகள் இல்லை என மருத்தவ பீடத்தினரும் இன்முகத்துடன் சம்மதித்ததோடு, அதற்கான பூர்வாங்கப் பேச்சுக்களில் ஈடுபடத் தயாராகினர்.




இதனிடையே யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பி.சீ.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளப்படப் போகின்றன என்பதை ஊரடங்கு நேரத்திலும் ஊகித்தறிந்து கொண்ட சில 'உள்வீட்டுப் பிள்ளைகள்' அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடத்தொடங்கினர்.

எங்கே? எவ்வாறு? சோதனைகள் மேற்கொள்ளப்படப் போகின்ற போன்ற விடயங்களில் இறுதி முடிவுகள் எட்டப்படுவதற்கு முன்னரே "யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இந்தச் சோதனைகளைச் செய்வதற்கு பொருத்தாமானதொரு இடமல்ல,"

(14 ஆம் பக்கம் பார்க்க...)

> யாழ்.மருத்துவ பீட ஆய்வு கூடம் மிக சிறந்த தரமான ஆய்வு கூடம். அந்த ஆய்வு கூடம் மிகுந்த பாதுகாப்பும் வசதியானதுமாக இருக்கின்றது. ஒரு கொரோனோ பரிசோதனை செய்யும் ஆய்வு கூடமானது எவ்வாறு இருக்க வேண்டுமோ அதே தரத்துடன் இந்த ஆய்வு கூடம் இருக்கின்றது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஜோனதன் அமோஸ் - (பிபிசி)

# பெருமளவில் பிளாஸ்டிக் கழிவுகள் ஆழ்கடல் பகுதியில் கண்டெடுப்பு



இதுவரை இல்லாத வகையில் கடலின் படுக்கையில் அதிகபட்ச நுண்ணிய பிளாஸ்டிக் துகள்களை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இத்தாலிக்கு அருகிலுள்ள மத்தியத் தரைக் கடலின் அடிப்பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட படிவுகளில் இந்த மாசுபாடு காணப்பட்டது.

மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வில், ஒரு சதுர மீட்டர் நிலப்பரப்பில் 1.9 மில்லியன் பிளாஸ்டிக் துகள்கள் வரை கண்டுபிடிக்கப்பட்டன.

ஆடை மற்றும் பிற துணிகளிலிருந்து வரும் இழைகளும், காலப்போக்கில் உடைந்த பெரிய பொருள்களின் சிறிய துண்டுகளும் இந்தக் கழிவில் அடங்கும்.

இந்த நுண்ணிய பிளாஸ்டிக் துகள்கள் (ஒரு மில்லி மீட்டருக்கும் குறைவான அளவு) பெருங்கடல் நீரோட்டத்தால் கடலின் அடித்தள பகுதியில் குறிப்பிட்ட இடத்தில் குவிக்கப்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

இந்த நீரோட்டங்கள் நீருக்கடியில் மணல் திட்டுகள் போன்ற அமைப்பை உண்டாக்கியுள்ளன என்று இந்த ஆராய்ச்சியை மேற்கொண்ட குழுவின் தலைவரான டாக்டர் இயன் கேன் கூறுகிறார்.



அவை பத்துக்கும் மேற்பட்ட கிலோமீட்டர்கள் நீளமும், நூற்றுக்கணக்கான மீட்டர்கள் உயரமும் கொண்டிருக்கலாம். அவை பூமியில் உள்ள மிகப்பெரிய வண்டல் குவியல்களில் ஒன்றாகும். மிகச் சிறந்த மண்ணால் ஆன அந்த சேற்றுப்படிவின் உள்ளே இந்த நுண்ணிய பிளாஸ்டிக் துகள்கள் இருக்கக்கூடும் என்று நாங்கள் கருதுகிறோம் என்று பிபிசியிடம் அவர் கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும் 40 லட்சம் முதல் 1.2 கோடி தொன் வரையான பிளாஸ்டிக் கழிவுகள் கடலில் கலக்கின்றன; பெரும்பாலும்



இவை ஆறுகளின் வழியே கொண்டுவரப்படுகின்றன.

அவ்வபோது கடற்கரைகளிலும் கடற்பரப்பின் மீதும் மிதக்கும் அதிகளவிலான கழிவுகள் ஊடகங்களில் தலைப்பு செய்திகளாக வருகின்றன.

ஆனால், அவை கடலில் கலந்துள்ள மொத்த பிளாஸ்டிக்குகளில் வெறும் ஒரு சதவீதமே ஆகும். எனவே, மீதி 99 வீதக் கழிவுகள் கடலில் எங்கே உள்ளன என்பது அறியப்படாமல் உள்ளது.

மீதம் உள்ள கழிவுகளில் குறிப்பிடத்தக்க அளவு கடல்வாழ் உயிரினங்களால் உண்ணப்பட்டிருக்கும். அதில் எஞ்சிய பெரும்பாலான பிளாஸ்டிக் கழிவுகள் கடலின் அடித்தளத்தை அடைந்திருக்கும்.

ஆழ்கடல் அகழிகள் மற்றும் கடல் பள்ளத்தாக்குகளில் காணப்படும் வண்டல்களில் அதிக அளவு நுண்ணிய பிளாஸ்டிக் துகள்கள் இருக்கக்கூடும் என்பதை டாக்டர் கேனின் குழு ஏற்கனவே கண்டறிந்துள்ளது.

கடல் அடித்தளத்தில் ஏற்படும் மிகப்பெரும் நீரோட்டங்கள் ஒரே நேரத்தில் பெருமளவிலான வண்டல்களை நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர்களுக்கு அப்பால் கொண்டு செல்லும் என்று கூறுகிறார் டர்ஹாம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஃப்ளோரியன் பொல்.

இந்த பெருங்கடல் நீரோட்டங்கள் எப்படி நுண்ணிய பிளாஸ்டிக் துகள்களை ஓரிடத்தில் புதைக்கின்றன என்பது குறித்து சமீபத்திய ஆய்வக சோதனைகளின் வாயிலாக புரிந்து கொண்டு வருகிறோம்.

உலகின் பல பகுதிகள் வெப்பநிலை மற்றும் உப்புத்தன்மை முரண்பாடுகளால் இயக்கப்படும் வலுவான, ஆழமான பெருங்கடல் நீரோட்டங்களைக் கொண்டுள்ளன. அடிப்படையில் இந்த நீரோட்டங்கள்தான் ஆழ்கடல் உயிரினங்களுக்கு ஆக்ஸிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்களை வழங்குகின்றன

## செத்து மடியும் கடல்வாழ் உயிரிகள்

என்பதால் இது கவலைக்குரிய விடயமாகும். ஏனெனில், இந்த நீரோட்டங்களில் அடித்து வரப்படும் பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவுகளை உண்ணும் உயிரிகள் விரைவில் உயிரிழக்கும் அபாயம் உள்ளது.

கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் காட்டப்படும் அதே தீவிரமும், முக்கியத்துவமும் கடலில் கலக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை தடுப்பதில் காட்டப்பட வேண்டும் என்று இந்த ஆராய்ச்சியில் அங்கம் வகித்த மற்றொரு ஆராய்ச்சியாளரான ஜெர்மனியை சேர்ந்த பேராசிரியர் எல்டா மிரமோன்ட்ஸ் வலியுறுத்துகிறார்.

இதுகுறித்து பிபிசியிடம் பேசிய அவர், கொரோனா வைரஸிடமிருந்து தற்காத்து கொள்வதற்காக நாம் நமது வாழ்க்கைப்போக்கில் எண்ணற்ற மாற்றங்களை ஏற்றுக்கொண்டுள்ளோம். அதே அளவு முக்கியத்துவத்தை கடலை காப்பாற்றுவதற்கும் நாம் கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார்.

அமெரிக்காவின் கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் அறிவியல் மற்றும் மேலாண்மை பள்ளியின் தொழில்துறை சூழலியல் பேராசிரியராக உள்ள ரோலண்ட் கெயர், பிளாஸ்டிக் துகள்கள் கடலுக்குள் எப்படி கலந்து அதன் இயற்கையான நீரோட்டத்தில் இணைகின்றன என்பது குறித்து நீண்டகாலமாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

கடலில் எந்த அளவுக்கு பிளாஸ்டிக் கழிவுகள் கலந்துள்ளன என்பது குறித்து நம்மிடம் சரிவரத் தகவல் இல்லை. பெரும் எண்ணிக்கையிலான பிளாஸ்டிக் துகள்கள் கடலின் மேற்பரப்பில் மிதப்பது இல்லை என்பதால் அதன் ஒட்டுமொத்த அளவையும் கண்டறிவது என்பது சவாலாக உள்ளது என்று அவர் கூறுகிறார்.

எனினும் நாம் உடனடியாக கடலில் புதிதாக பிளாஸ்டிக் கழிவுகள் கலப்பதை தடுக்க முன்னுரிமை கொடுக்க வேண்டும்; கடலின் எந்த பகுதியில் எவ்வளவு பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளன என்பதை கண்டறிவது இரண்டாம் கட்ட பணியாக இருக்க வேண்டும். – என்றார் அவர்.



கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் காட்டப்படும் அதே தீவிரமும், முக்கியத்துவமும் கடலில் கலக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை தடுப்பதில் காட்டப்பட வேண்டும் என்று இந்த ஆராய்ச்சியில் அங்கம் வகித்த மற்றொரு ஆராய்ச்சியாளரான ஜெர்மனியை சேர்ந்த பேராசிரியர் எல்டா மிரமோன்ட்ஸ் வலியுறுத்துகிறார்.

# யாழ் மருத்துவ பீடத்தில்.....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"இங்கிருக்கும் விரிவுரையாளர்கள் இதற்குத் தகுதியானர்கள் இல்லை", ஒரு வைரஸ் நிபுணர் (வைரோலொஜிஸ்ட்) இல்லாமல் இதனைச் செய்ய முடியாது", "இது பாதுகாப்பானதில்லை", "மாணவர்களும், ஊழியர்களும் தொற்றை வாங்கப் போகிறார்கள்" போன்ற விசமக்கருத்துக்களைக் கொண்ட மின்னஞ்சல் ஒன்று சோதனை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னரே பகிரப்பட்டது.

மின்னஞ்சல் மூலம் விசமக் கருத்துகள் பரவ விடப்பட்டாலும், யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இந்தப் பரிசோதனையை மேற்கொள்வதற்கான முன்னாயத்தக் கூட்டங்களின்போது மின்னஞ்சலில் 'அநாமதேயமாகக்' குறிப்பிடப்பட்ட விடயங்கள் குறித்தும் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இது பற்றிய ஒரு கலந்துரையாடலில் போது யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் "இதுவொரு தேசிய செயற்றிட்டம், வசதிகள் இருக்கின்ற நிலையில் இதனைச் செய்வதற்கு நீங்கள் முன் வருகின்றபோது வேறு எந்தப் பிரச்சினைகள் வந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன்.", "ஜனாதிபதி செயலணியின் நேரடி நெறிப்படுத்தலில் இடம்பெறும் செயற்பாடுகளில் ஏதாவது இடையூறு வந்தால் நான் அந்த மட்டம் வரை சென்று தீர்வைப் பெற்றுத் தருவேன்"என்று மருத்துவ பீடத்தினருக்கு நம்பிக்கையூட்டி இருக்கின்றார்.

மேலதிகமாக இத்தகைய பரிசோதனைகள் ஒரு "கிளினிக்கல் வைரோலொஜிஸ்ட்' இன் நேரடி கண்காணிப்பு இல்லாமல் மேற்கொள்ளப்படமுடியாது என்ற "அநாமதேய ஆர்வலர்களின்" குறிப்புக்கமைய வடக்கில் எந்தவொரு வைத்தியசாலையிலும் "கிளினிக்கல் வைரோலொஜிஸ்ட்" இல்லாத நிலையில் அநுராதபுரத்தில் உள்ள ஒரே ஒரு "கிளினிக்கல் வைரோலொஜிஸ்" வைத்தியக் கலாநிதி சாரங்க சுமதிபாலவின் சம்மதத்துடன், யாழ் மருத்தவ பீடத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனை முடிவுகளை பரிசீலனைக்குட்படுத்தி அத்தாட்சிப்படுத்தும் பணிகளுக்காக "கவரப்" ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

அத்துடன் ஆய்வுநடவடிக்கைளின் போது தொற்று நிலை மேற்பார்வை மற்றும் அறிக்கையிடலுக்கென "கிளினிக்கல் மைக்றோபயோலொஜிஸ்ட்" வைத்திய கலாநிதி அஜந்தியும் இந்த அணியில் உத்தியோகபூர்வமாக சேர்க்கப்பட்டிருக்கின்றார்.

இந்த நிலையில், தங்கள் விசமப் பிரசாரங்கள் உள்வீட்டில் செல்லாமல் போக அந்த "அநாமதேயப்' பேர்வழிகள் மீண்டும் மருத்துவ பீடத்து கொரோனாச் சோதனைகள் பற்றி ஊடகங்களின் ஊடாக மக்களைப் பீதிக்குள்ளாக்கும் செயலில் இறக்கி இருக்கின்றன.

இந்தப் பின்னணியில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொரோனா சோதனை உண்மையில் தொற்றபாயம் உள்ளதொன்றா? உரிய பாதுகாப்பு நியமங்கள் பின்பற்றப்படுகின்றனவா? ஆகிய சந்தேகங்கள் எமக்கும் எழுந்தவைதான்.

மருத்துவ பீடத்தினுள் நிலவுகின்ற உள்வீட்டுப் பிரச்சினைகளினால் புரையோடிப்போய் இருக்கின்ற அதிகாரப் போட்டியின் ஓர் அங்கமாக, ஆளடையாளமின்றி – அநாமதேயமாக – முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மை என்ன? என்பது குறித்து எமது குழு சம்பந்தப்பட்டவர்களிடம் நேரடியாகவே தொடர்பு கொண்டு விடயங்களை உறுதிப்படுத்திக் கொண்டது.

யாழ்.மருத்துவ பீட ஆய்வு கூடம் மிக சிறந்த தரமான ஆய்வு கூடம். அந்த ஆய்வு கூடம் மிகுந்த பாதுகாப்பும் வசதியானதுமாக இருக்கின்றது. ஒரு கொரோனோ பரிசோதனை செய்யும் ஆய்வு கூடமானது எவ்வாறு இருக்க வேண்டுமோ அதே தரத்துடன் இந்த ஆய்வு கூடம் இருக்கின்றது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அதுமட்டுமல்ல, கொரோனோ தொற்றாளர்களின் மாதிரிகளை பரிசோதிக்கும் பரிசோதகர்கள், அவர்களின் உதவியாளர்கள் தொடக்கம் ஆய்வு கூடத்தைச் சுத்தம் செய்யும் தூய்மைத் தொழிலாளி வரை பாதுகாப்பாகவே தமது கடமைகளைச் செய்கின்றார்கள்.

அதேவேளை, பரிசோதனை மாதிரிகள் மற்றும் தொற்று இனம் காணப்பட்டவர்களின் மாதிரிகளை மிக மிகப் பாதுகாப்பாக அப்புறப்படுத்த கூடிய வசதிகள் என எமது மருத்துவ பீட ஆய்வு கூடம் தரமானதும் பாதுகாப்பானதுமானது என்று அவை மேலும் விளக்கமளிக்கின்றன.

இந்தப் பரிசோதனைகளில் ஈடுபடுகின்றவர்கள், தங்களைப் பற்றி – அதிகாரப் போட்டியின் வெளிப்பாடாகத் தங்கள் மீது சேறு பூசப்படுவதைப் பற்றி – கிஞ்சித்தும் அச்சம் கொள்ளவில்லை. மாறாக மக்களைக் குழப்பி, மக்களின் உணர்வோடு குளிர்காய முனைபவர்களின் செயற்பாடுகள் குறித்துத்தான் கவலை கொள்கிறார்கள்.

யாருக்காவது, ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் சம்பந்தப்பட்டவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு தெளிவு படுத்திக் கொள்ளலாம் என்கிறார்கள் அவர்கள்.

இந்தப் பரிசோதனைகள் சர்வதேசத் தர நியமங்களுக்கமைவாக மருத்துவ பீடத்தின் "பரிசிற்றோலொஜி" துறையின் "மொலிக்கியூலர் பயோலொஜி" ஆய்வு கூடத்தில் ஏற்கனவே இந்தப் பரிசோதனைகளுக்குத் தேவையான சகல ஆய்வு கூட உபகரணங்களும் இருந்தன. இதற்கான சகல வசதிகளும் உள்ள அந்த ஆய்வு கூடத்தில் மிகவும் பாதுகாப்பான முறையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவ்வத் துறைகளில் கற்றுத் தேர்ந்த துறைசார் நிபுணர்களின் நேரடிக் கண்காணிப்புடனேயே அனைத்துப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு, ஆய்வறிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன என்றும் சம்பந்தப்பட்டவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தப் பரிசோதனைகளில் ஈடுபடுகின்ற எவரும் இலாபங்கருதி இதனைச் செய்பவர்களாகத் தெரியவில்லை. மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே இதில் ஈடுபடுகிறார்கள். உதாரணமாக சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் ஆய்வு கூடத்துக்குத் தயார்ப்படுத்தும் போதே பி. பி. ஈ. எனப்படும் தனி நபர் பாதுகாப்பு அங்கியை அணிந்து விட்டால் கிட்டத்தட்ட ஆறேழு மணி நேரத்துக்கு – ஆய்வுகள் முடியும் வரை – அதனைக் அகற்ற முடியாது. இந்த இடைவெளியில் மலம், சலத்துக்காகக் கூட வெளியேற முடியாது. உணவு, நீர் எதுவுமில்லை.

இதில் இன்னுமொரு விடயமும் தங்கியிருக்கின்றது. மருத்துவ பீடத்தில் இந்தப் பரிசோதனைகளில் ஈடுபட வேண்டும் என்று மருத்துவ பீடத்தின் கல்வியாளர்களான இவர்களுக்கு எந்தக் கட்டாயமுமில்லை. மேலிடங்களிலிருந்து கட்டாயப்படுத்தி இவர்களை ஈடுபடுத்துவதற்கு இவர்கள் சுகாதாரத் துறைப் பணியாளர்களுமில்லை.

இவ்வாறு சுய நலம் – பசி, தூக்கம் மறந்து பொது நலனுக்காகப் பணியாற்றுபவர்களைப் போற்றாதிருப்பினும், தூற்றாமலாவது இருப்பது சமூகப் பொறுப்புள்ளவர்களின் கடமையல்லவா?

எல்லாவற்றையும் விட, தொற்றபாயம் உண்டெனில் அவர்கள் தங்கள் குடும்பத்தினிடம் செல்வது எப்படி? யாறைப் பற்றி அக்கறை இல்லாவிடினும் தன்னையும், தன் சார்ந்தவர்களையும் இந்தத் தொற்று அண்டாத வகையில்தானே அவர்கள் நடந்து கொள்வார்கள்?

ஆரம்பத்தில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பீ.சீ.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆய்வு கூடங்கள் அமைக்கப்பட்டு, சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரைத்தன்னார்வத் தொண்டு அடிப்படையில் செய்து கொடுப்பது என்ற புரிந்துணர்வின் அடிப்படையில் மருத்துவ பீடத்தில் இந்த ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் காலத்தின் கட்டாயத்தினால் – தேவையுணர்ந்து – தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதனாலேயே யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் சுமார் 100 வரையிலான பீ.சீ.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வது சாத்தியமாகிறது.

சரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை,அதனால் பல்கலைக்கழக சமூகத்துக்கு தொற்றபாயம் உள்ளது என்றால், பிற ஆய்வுகூடங்கள் தொடர்பில் முன்னணி ஆய்வு கூடவியலாளர் ரவி குமுதேசைப் போல நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு உண்மையைச் சொல்வதற்கு ஏன் இங்குள்வர்களுக்குத் திராணி இல்லை?

இவர்கள் பரப்பும் விசம விடயங்களில் உண்மை இருக்குமானால் இப்படி "ஒளித்துப் பிடித்து" விளையாட வேண்டிய தேவை இல்லையே?

மிக அண்மையில் கூட, குளிரூட்டி திருத்தல் பணிகளுக்காக இரண்டு நாள் பரிசோதனைகள் நிறுத்தப்பட்டபோது அதனை "வைரஸ் தொற்றுக் காரணமாக சோதனைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன", "கொழும்பிலிருந்து அதிகாரிகள் வந்து சோதனைகளை மேற்பார்வை செய்யப் போகின்றார்கள்" என்றெல்லாம் தங்கள் "தாளத்துக்கு நாட்டியம் போடும்" ஊடகங்கள் சிலவற்றைக் கொண்டு வதந்திகளைப் பரப்ப முனைந்த போதும், திருத்தப் பணிகள் முடிந்து மீண்டும் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதால. அதன் மூலம் "அநாமதேய அசகாய சூரர்கள்" முகங்களில் கரி பூசப்பட்டிருக்கிறது.

சவால்கள் மத்தியிலும் மேற்கொள்ளப்பட இந்த அர்பணிப்பு மிக்க பணிகளுக்கு முட்டுக்கட்டை போடுகின்றவர்களின் நோக்கம் என்ன? சம்பந்தப்பட்டவர்கள் யார்? என்பது பற்றி ஆதாரங்களுடன் இன்னுமொரு பதிவில் சந்திப்போம்.

# கொரோனா வைரஸில் திடீர் மரபணு மாற்றங்கள்; தடுப்பூசி கண்டுபிடிப்பதில் பின்னடைவு ஏற்படுமா?



ரேச்சல் ஷ்ரேயர்
பிபிசி

அமெரிக்கா மற்றும் பிரிட்டனை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கொவிட் 19 நோயை ஏற்படுத்தும் கொரோனா வைரஸின் நூற்றுக்கணக்கான திடீர் மரபணு மாற்றங்களை (mutation) அடையாளம் கண்டுள்ளனர்.

ஆனால், கொரோனா வைரஸின் இந்த நூற்றுக்கும் அதிகமான திடீர் மரபணு மாற்றங்களுக்கும் அதன் பரவும் தன்மைக்கும், அது தடுப்பூசி கண்டறிவதில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும் இதுவரை ஏதும் நிறுவப்படவில்லை.

திடீர் மரபணு மாற்றம் அடைவது வைரஸின் இயல்பு.

ஆனால், இந்த மாற்றங்களுக்கும், கோவிட்19 நோயின் வீரியம் தீவிரமடைவதற்கு அல்லது தொற்று பரவும் விதத்திற்கும் ஏதாவது தொடர்பு உள்ளதா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

கோவிட்19 நோயை ஏற்படுத்தும் வைரஸின் புதிய மரபுப் பிறழ்வான (mutant) D614G ஆதிக்க நிலையை அடைந்து வருவதாகவும், இது நோய்த் தொற்று பரவலை மேலும் மோசமாக்கும் என்றும் இது தொடர்பாக அமெரிக்காவில் நடைபெற்று வரும் முதற்கட்ட ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

எனினும், இந்த ஆய்வு முடிவுகள் பரந்துபட்ட அறிவியல் உலகின் மற்ற ஆராய்ச்சியாளர்களால் உற்றுநோக்கப்படவும் இல்லை, முறையாக பதிப்பிக்கப்படவும் இல்லை.

அமெரிக்காவின் நியூ மெக்சிகோவில் உள்ள லாஸ் அலமோஸ் தேசிய ஆய்வகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், வைரஸின் தனித்துவமான வடிவத்தில் ஏற்படும் மாற்றங்களை நூணூறிநூணும் எனும் தரவுத்தளத்தை பயன்படுத்தி கண்காணித்து வருகின்றனர்.

இந்த குறிப்பிட்ட வைரஸ் மரபுப் பிறழ்வு மற்றவற்றைவிட வேகமாக வளர்வதற்கு ஏதாவது காரணம் இருக்கக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், இதனால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து இதுவரை தெளிவில்லை.

பிரிட்டனிலுள்ள நோயாளர்களை கொண்டு இந்த பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. வைரஸின் அந்த குறிப்பிட்ட பிறழ்வுள்ள நபர்களின் மாதிரிகளில் அதிக அளவு வைரஸ் இருப்பதாக அவர்கள் கண்டறிந்தாலும், அதன் காரணமாக நோயாளிகள் நோய் வாய்ப்பட்டதற்கான அல்லது நீண்ட காலம் மருத்துவமனையில் தங்கியிருந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கவில்லை.

'பிறழ்வு மோசமானது அல்ல'

யூனிவர்சிட்டி காலேஜ் லண்டன் சார்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில், கோவிட்19 நோயை ஏற்படுத்தும் வைரஸின் 198 விதமான பிறழ்வுகளை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

வைரஸ்களில் மரபுப் பிறழ்வுகள் என்பது ஒரு மோசமான விடயம் அல்ல. அதே சமயத்தில், இந்த பிறழ்வுகளை மையமாக கொண்டு கொரோனா வைரஸ் எதிர்பார்த்ததை விட வேகமாக அல்லது மெதுவாக மாறுகிறது என்ற முடிவுக்கும் வர முடியாது என்று அந்த ஆராய்ச்சியை மேற்கொண்டவர்களில் ஒருவரான பேராசிரியர் ஃபிராங்கோயிஸ் பலூக்ஸ் கூறுகிறார்.

தற்போதுள்ள சூழ்நிலையில், கொரோனா வைரஸ் பரவுவதற்கான மற்றும் உயிரை பறிப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறதா அல்லது குறைகிறதா என்று கூற முடியாது.

கொரோனா வைரஸின் மரபுப் பிறழ்வுகள் குறித்து கிளாஸ்கோ பல்கலைக்கழகம் பகுப்பாய்வு செய்தது. தற்போது உலகம் முழுவதும் ஒரே வகை வைரஸ் மட்டுமே பரவுகிறது என்ற முடிவுக்கு அவர்கள் வந்துள்ளனர்.

வைரஸின் கட்டமைப்பில் ஏற்படும் மிகச் சிறிய மாற்றத்தையும் கண்காணிப்பது அவசியம். ஏனெனில், அது தடுப்பூசி உருவாக்கத்தில் தாக்கத்தை செலுத்தக்கூடும்.

அதாவது, ஒருவேளை தற்போது பரவும் கொரோனா வைரஸின் ஒரு குறிப்பிட்ட பிறழ்வுக்கு தடுப்பூசி கண்டறியப்பட்ட பிறகு, அதன் வடிவம் மாறிக்கொண்டே இருந்தால், அப்போதெல்லாம் தடுப்பூசியிலும் மாற்றம் செய்ய வேண்டியிருக்கும்.

**தடுப்பூசி கண்டறிவதில் உள்ள சிக்கல்**

தற்போது ஆராய்ச்சி நிலையில் உள்ள பல கொவிட்19 தடுப்பூசிகள் அந்த வைரஸின் தனித்துவமான கூர்முனைகளை குறிவைக்கின்றன. அதாவது, கொரோனா வைரஸின் தனித்துவமான கூர்முனைகளை உங்களது உடல் கண்டறியச் செய்து அதை எதிர்த்து போராடும் திறனை அளிக்கும் வகையில் தடுப்பூசிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் அந்த கூர்முனையின் அமைப்பு மாறினால், இந்த வழியில் உருவாக்கப்பட்ட தடுப்பூசிகள் குறைவான செயல்திறன் மிக்கனவாக மாறும்.

இந்த நேரத்தில் இது எல்லாம் தத்துவார்த்தமானது. வைரஸின் மரபணுவில் நடக்கும் மாற்றங்கள் எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்பதைக் கூற ஆராய்ச்சியாளர்களிடம் இன்னும் போதுமான தகவல்கள் இல்லை.

வைரஸின் எண்ணற்ற மரபணுக்களை பகுப்பாய்வு செய்வது தடுப்பூசி கண்டறிவதில் குறிப்பிடத்தக்க பங்காற்றும் என்று கூறுகிறார் இந்த ஆய்வை முன்னெடுத்த யூனிவர்சிட்டி காலேஜ் லண்டனின் மற்றொரு ஆய்வாளரான லூசி வான் டார்ப்.



# ஒரு இலட்சம் விருப்பு வாக்குகள் இம்முறை எடுப்பாராம் சுமந்திரன்

## சிங்கள ஊடகத்துக்கு அவரே பேட்டி

கொழும்பு,மே.10

"இந்த முறை பொதுத் தேர்தலில் ஒரு லட்சம் விருப்பு வாக்குகளைப் பெற்று நான் வெற்றி பெறுவது நிச்சயம். இதனை ஒரு சவாலாக கூறி வைக்கின்றேன்."

–இவ்வாறு சிங்கள ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

அந்த ஊடகம் இடக்கு மடக்காகப் பல கேள்விகளை சிங்களத்தில் அவரிடம் கேட்டது. அவர் சிரித்துக் கொண்டே பதில் சொன்னார்.

கடந்த தடவை தேர்தலில் 58 ஆயிரம் விருப்பு வாக்குகள் பெற்றீர்கள். அதை இம்முறை தக்கவைப்பீர்களா என்றச் சாரப்படொரு கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது.

"அதைப்போல இரண்டு மடங்கு வாக்குகள் பெறுவேன். இந்த முறை பொதுத் தேர்தலில் ஒரு லட்சம் விருப்பு வாக்குகளைப் பெற்று நான் வெற்றி பெறுவது நிச்சயம். இதனை ஒரு சவாலாக கூறி வைக்கின்றேன்." – என்றார் சுமந்திரன்.

"சுதந்திரம் கிடைத்தது முதல் இதுவரை தமிழ் மக்களுக்கான உரிமைகள் கிடைக்கவில்லை. கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் தேவைக்காக தோற்றம் பெறவில்லை" எனவும் அப்பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரம் கிடைத்தது முதல் இதுவரை தமிழ் மக்களுக்கான உரிமைகள் கிடைக்கவில்லை என்பதே உண்மை. கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் தேவைக்காக தோற்றம் பெறவில்லை. தற்போது கூட்டமைப்பில் மூன்று கட்சிகளே உள்ளன காலத்துக்கு காலம் சில கட்சிகள் வருவார்கள். போவார்கள்.

கூட்டமைப்பை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் எந்தவித எண்ணமும் இல்லை. இரா.சம்பந்தனே கூட்டமைப்பின் உண்மையான தலைவர். கூட்டமைப்பை நிர்வகிப்பது அவர் மாத்திரமே என்பதை தெளிவாக கூறுகின்றேன். என்னை கூட்டமைப்பின் தலைவர் என கூறுவதை நிராகரிக்கின்றேன்.

இலங்கையில் அனைத்து இன மக்களும் எந்தவித பாகுபாடும் இன்றி வாழ வேண்டும் என்பதே எனது நோக்கம், மாறாக நான் இனவாதியல்லன்.

தற்போது வரையில் எனது அரசியல் தலைவர் சம்பந்தன் மாத்திரமே. ஜே.வி.பியோடு இணைந்து சில விடயங்களை ஆற்றினேன் என்பதற்காகத் தற்போது எனது தலைவர் அநுரகுமார திசாநாயக்க எனக் கூற முடியாது.

நான் சகல கட்சிகளுடனும் இணைந்து செயற்படத் தயார். அரசியல் கைதிகளில் பலரை விடுவிக்க நான் செயற்பட்டுள்ளேன். காணி விடுவிப்பில் எனது பங்கும் உண்டு இது மக்களுக்கு தெரியும்.

புலம்பெயர் தமிழர்கள் அனுப்பும் பணத்தை கையாள்வது நான் எனக் கூறுவதை முற்று முழுதாக நிராகரிக்கின்றேன். தற்போது வடக்கு மக்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் வசிக்கும் அவர்களது உறவினர்கள் அனுப்பும் பணத்தை கொண்டே ஜீவிக்கின்றனர்.

தற்போதைய நிலையில் மேலும் ஆறு மாதகாலம் வழங்கினாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஒன்று சேராது.

ஆகவே ஐ.தே.க. ஒன்று சேர்ந்து புதிய வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்காகத்தான் புதிதாகத் திரும்பவும் தேர்தலுக்கு அழைப்பு விடச் செய்யும் விதத்தில் வழக்குத் தாக்கல் செய்கிறோம் என்பது தவறு.

நான் சிங்கள மக்களை வைரிகளாக – வைராக்கியத்தோடு நோக்குவதில்லை. – என்றார்.

# மன்னார் நகரில் 55 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்திப் பணிகள்

ஆசிய வங்கியின் நிதி உதவியுடன் மன்னார் நகர சபை பிரிவில் சுமார் 55 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப் படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு இடத்தைக் கையளிக்கும் வகையில் துரித வேலைத்திட்டம் இடம் பெற்று வருவதாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் சுமார் 55 கோடி ரூபா நிதியில் மன்னார் நகரப்பகுதி அபிவிருத்தி செய்யப் படவுள்ளது.

அதற்கு அமைவாக நூறு கடைகள், வாகனத்தரிப்பிடம், செயற்கை நீர் வீழ்ச்சி, பார்வையாளர் அரங்கு, சுப்பர் மார்க்கெட் மற்றும் அதனுடன் இணைந்த திரையரங்கு கே.எப்.சி போன்றவை அமைக்கப்பட வுள்ளன.

இடத்தை கையளிக்கும் வகையில் முதல் கட்ட பணிகள் மன்னார் நகர சபையால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மன்னார் பஸார் பகுதி 'சைனா பஜார்' பகுதியில் காணப்பட்ட கடைத்தொகுதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

அவர்களுக்கு தற்போது புதிய கடை வழங்கப்பட்டுள்ளது. தற்போது கடைகள் அகற்றப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிப்பதற்கான முன்னேற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

மன்னார் நகரை அழகு படுத்தி பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் முயற்சியின் மன்னார் நகர சபை செயல் பட்டு வருகின்றது. இந்தச் செயல்திட்டத்திற்கு மன்னார் நகர மக்கள், வர்த்தகர்கள் மன்னார் நகரசபைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.என மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மேலும் தெரிவித்தார்.

# கடவுச்சீட்டு அலுவலகம் நாளை முதல் செயற்படும்

குடிவரவு, குடியகல்வு திணைக்களம் நாளை திங்கள் கிழமை முதல் மக்கள் சேவைக்கு திறக்கப்படும் என திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சேவைகளை பெறுவதகாக பொதுமக்கள் அலுவலகத்திக்கு வரும் போது கண்டிப்பாக சுகாதார கட்டுப்பாடுகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப் படுகின்றனர்.

கடவுச்சீட்டு பெறுவதற்கான (ஒரு நாள் சேவை, சதாரண சேவை) விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளுதல், கடவுச்சீட்டில் மாற்றங்கள் செய்தல், பிரஜாவுரிமைப் பதிவுகள் மற்றும் விசா நீடிப்பு போன்ற சேவைகளை மேற்கொள்ள முடியும்.

முக்கியமாக இந்தச் சேவைகளை பெறுவதற்கு மக்கள் முன்கூட்டியே தமக்கான நேரத்தினை தொலைபேசி அல்லது இணையம் மூலமாக முற்பதிவு செய்ய வேண்டும் எனவும், முற்பதிவுகள் வேலை நாள்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது

## முதலாம் ஆண்டு நினைவில்

தோற்றம் 1945 – 03 – 28



மறைவு 2019 – 04 – 22

அமரர்

**திரு செல்லத்துரை தர்மரத்தினம்**

(பெரியண்ணன்)

உரிமையாளர் - STR Multy Centre, STR Travels அராலி

திதி சங்கடஹர சதுர்த்தி (10.05.2020)

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறை விடமாய் வாழ நல்வழி காட்டி நம்மை வழி நடத்திய நீங்கள் மறைந்து ஆண்டொன்று சென்றதுமே என்றும் உங்கள் நினைவில் வாழும்

குடும்பத்தினர். 0777570150

காலைக்கதிர் Kalaikkathir

## மேளக் கச்சேரி

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு




## சித்திரப்போட்டி

**இன்று (10/05/2020) தலைப்பு**
**மேளக் கச்சேரி**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வண்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# பள்ளிகளை உடைக்க வைத்து வாக்கு சேகரித்த மாதிரி ஜனாஸாக்களை எரிக்க வைத்து வாக்குச் சேகரிக்காதீர்!

## ஆட்சி தரப்புக்கு எத்திராகப் பாய்கின்றார் அதாஉல்லா

கொரோனா வைரஸ் தாக்கிய முஸ்லிம் ஜனாஸாக்களை அரசினால் அடக்கம் செய்ய முடியாவிட்டால் எங்களிடம் தாருங்கள் என்பதை அழுத்தமாகக் கூற விரும்புகிறேன். நீங்கள் கூறப்போகும் உயிரியல் காரணங்களை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாரில்லை. முஸ்லிம் ஜனாஸாக்களை வைத்து அரசியல் செய்யும் அரசியல்வாதிகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். பள்ளிகளை உடைக்க வைத்து வாக்கு சேகரிக்க முயன்றதை போன்று இதையும் வைத்து வாக்கு சேகரிக்க முயலாமல் நாட்டினதும், முஸ்லிங்களினதும் நிலை கருதி இறைபக்தியுடன் செயற்படுங்கள் என தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாஉல்லா கேட்டுக்கொண்டார்.

கிழக்குவாசலில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசியல் கலந்துரையாடலில் கலந்து கொண்டு பேசிய அவர் முஸ்லிங்களின் ஜனாஸா எரிப்பு விடயங்கள் பற்றி கடும்தொனியில் பேசினார்.

தொடர்ந்து அவரது பேச்சில் –

இலங்கையில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற முஸ்லிங்களுக்கு காலத்திற்கு காலம் எழுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஆழமாக நோக்கப்பட்டு கடந்தகாலங்களில் இருந்த தலைவர்கள் அதனை தீர்த்துவைத்துள்ளார்கள். கடந்த காலங்களில் நடைபெற்ற இனக் கலவரங்களின் போதும் எமது தலைவர்கள் சரியான தீர்வுகளை பெற்றுத்தந்துள்ளார்கள். துரதிஷ்டவசமாக தலைவர் அஷ்ரபின் இழப்பு பின்னர் முஸ்லிங்களுக்குச் சரியான தலைமைகள் கிட்டவில்லை. அது முஸ்லிங்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுக்கும் பாரிய இழப்பாகும். இப்போது இருக்கின்றவர்கள் சமூகத்தின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பற்றி சிந்திப்பதை விட அடுத்த தேர்தலுக்கு எதை முன்னிறுத்தலாம் என்பதைப் பற்றியே சிந்திக்கிறார்கள்.

சிங்கள, தமிழ் மக்களும் கூட இப்போது வாக்கு எடுக்கும் அரசியலுக்காக இனவாதத்தைக் கையில் எடுத்ததனால் மரணங்களின் பின்னர் நல்லடக்கம் செய்வதா? புதைப்பதா? அல்லது மரணித்தவரின் ஆசையாக எது இருந்தது என்பன பற்றியெல்லாம் அக்கறை கொள்ளாது அதற்கும் இப்போது சாவுமணி அடித்துள்ளார்கள்.

உலகம் முழுவதும் கொரோனாவின் தொற்று உள்ளது. அங்கும் மரணத்தின் பின்னர் எரித்தல் அல்லது நல்லடக்கம் செய்தல் என்பன இலகுவான ஒன்றாகவே நோக்கப்பட்டது. உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேசநாடுகள் எல்லாம் கொரோனா



தொற்றினால் உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரிகைகளை இலகுபடுத்தியுள்ளன. ஆனால் இலங்கை தவிர.

இந்தியாவிலும் அது இலகுவாக்கப்பட்டிருந்தாலும் இலங்கையில் உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரிகைகள் அரசியலிலும், இனவாதத்திலும், தேர்தலிலும் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது.

முஸ்லிங்களா, அதை எரிக்க வேண்டும் எனும் பார்வைக்குக் கொண்டுவருவதற்கு நமது அணுகுமுறைகளும் நமது தலைவர்களும் பிழை விட்டிருக்கிறார்கள் என்பது எனது பார்வை. என் மீதும் அந்த கடமை இருக்கிறது. முஸ்லிங்களுடைய பிரச்சினை சாம்பலை அடக்குவதா என்பதல்ல. முஸ்லிம்களைப் பொறுத்தவகையில் இது சமூக கடமை.

ஒரு முஸ்லிம் மரணித்தால் குளிப்பாட்டுவது, கப்பனிடுவது, தொழுகை நடத்துவது, நல்லடக்கம் செய்வது உலகில் உள்ள எல்லா முஸ்லிங்களுக்கும் கடமையான ஒன்று. ஏன் முஸ்லிம் ஜனாஸாக்களை எரிக்க முற்படுகிறார்கள் என்பதை அறிய சில வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற அரசின் முக்கிய பிரமுகர்கள், அரச உயரதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் சுகாதார பணிப்பாளர் நாயகத்தை நோக்கி கேள்வியை முன்வைத்தேன். சர்வதேச நியதிகள் ஒருவாறு இருக்க ஏன் நாம் அதை பற்றி சிந்திக்காமல் இருக்கிறோம். ஒருவரின் இறுதி சடங்கு கூட திருப்தியில்லாமல் அமைவது மனிதாபிமானத்திற்கு எதிரான ஒன்றாக உணரமுடிகிறது. முஸ்லிம் ஜனாஸாக்களை எங்களிடம் தாருங்கள். நாங்கள் பாதுகாப்பாக நல்லடக்கம் செய்கிறோம். அதற்கான இடம் இருக்கிறது என்று கேட்டேன்.

அந்த கேள்வியை முன்வைத்த போது உயிரியல் ரீதியாக ஒரு சந்தேகம் இருந்தது. மரணித்த உடலில் இருந்து கொரோனா வைரஸ் வெளியேறுமா என்ற சந்தேகமே அது.

சாதாரணமாக அப்படி நடக்க வாய்ப்பில்லை என்று தெரிந்தாலும் கூட உயிரியல் ஆராய்ச்சி என்ன சொல்கிறது என அறிய விரும்பினேன். அப்போது அங்கிருந்தவர்கள் கொரோனா தொற்று அற்ற சாதாரண ஜனாஸாக்களை நாங்கள் எரிக்க முற்படவில்லை. கொரோனா தொற்றுக்கு உள்ளான ஜனாஸாக்களை மட்டுமே எரிக்கிறோம். அதற்கு ஏன் முஸ்லிங்கள் ஒத்துழைக்க முடியாது என்று கேட்டார்கள். அப்போது அதற்குப் பதில் என்னிடமிருக்கவில்லை.

மரணித்த உடலில் இருந்து கொரோனா வைரஸ் வெளியேறுமா என்பது பற்றி உயிரியல் ஆராய்ச்சி என்ன சொல்கிறது என்பதை அறிந்த பின்னர் பேச நினைத்து அங்கிருந்து வந்துவிட்டேன். பின்னர் பிரித்தானியா போன்ற நாடுகளின் மருத்துவ வல்லுநர்கள், நமது நாட்டின் மருத்துவர்கள் மரணித்த உடலில் இருந்து கொரோனா வைரஸ் வெளியேறாது என்பதை அறிவித்திருந்தனர். சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இலங்கையின் பல்வேறு இனங்களையும் சேர்ந்த மருத்துவர்கள் விவாதம் செய்த போது மரணித்த உடல்களை அடக்கம்செய்ய முடியும், ஆனால் மக்கள் இதை வேறுவிதமாக நோக்குகிறார்கள், மக்கள் கொந்தளிப்பார்கள், இதனால் இவ்விடயத்தில் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டதை நாம் கேட்டுக்கொண்டு வரவேண்டி இருந்தது.

மக்களைக் கேடயமாக வைத்து மக்கள் குழப்புகிறார்கள் என்கிறார்கள். அவர்கள் யார் என்று நோக்கினால் அரசியல்வாதிகளே பின்னால் இருக்கிறார்கள். அவர்களே மக்களைப் பிழையாக வழிநடத்துகிறார்கள். எமது நாட்டின் சுகாதார அமைச்சு, சுகாதார திணைக்களம், சுகாதார – மருத்துவ அதிகாரிகள், பேராசிரியர்கள் முன்வந்து மக்களுக்கு உண்மைகளை விளக்கினால் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றால் – அதற்கு அரசியல் கட்சிகள் தடையாக இருந்தால் – நாம் அதை கண்டித்தே ஆகவேண்டும்.

முன்னாள் அமைச்சர் ராஜிதாவினால் உருவாக்கப்பட்ட இனவாத சிந்தனைகள் கொண்ட, முஸ்லிம்களை தொடர்ந்தும் வஞ்சிக்கும் மருத்துவ குழுவை கொண்டு, இந்த நாட்டின் அரசுக்கு எதிராக தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை திருப்பும் செயற்பாடுகளை அரங்கேற்றும் மருத்துவ குழுவினர் அவர்களின் வேலையை செய்கிறார்களா என சுகாதார அமைச்சர் பவித்திராதேவி வன்னியாராச்சி அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மேலும் உங்களின் கீழ் உள்ள செயலாளர்கள், மருத்துவ பணிப்பாளர்கள், மருத்துவர்கள் எல்லோரும் மரணித்த உடலில் இருந்து கொரோனா வைரஸ் வெளியேறாது என்பதை உங்களுக்கு அறிவித்தால் ஓர் அமைச்சராக இருக்கும் நீங்கள் ஏன் அதை மக்களுக்கு அறிவிக்காமல் ஒரு குழு எடுக்கும் தீர்மானங்களுக்கு தலையை அசைக்கின்றீர்கள்? இன்று அந்த குழுவுக்குள்ளையே பிளவுகள் ஏற்பட்டு விட்டன.

வேண்டுமென்றே எரிக்க வேண்டும் என்று அரசியல் செய்ய முற்பட்டதால் இன்று இறைவன் அவர்களுக்கு அதன் விளைவைக் காட்டியுள்ளான். கொரோனா வைரஸ் தாக்காத ஒரு தாயை எரிக்கும் அவலநிலை அரங்கேறியுள்ளது. கொரோனா வைரஸ் தாக்காத ஒரு தாயை எரிக்க வேண்டிய அவசர நிலை, மனிதாபிமானமில்லா நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழரோ, சிங்களவரோ, அமைச்சரோ, பிரதமர் மஹிந்தவோ, ஜனாதிபதி கோட்டாவோ இதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது மனித தர்மத்துக்கு எதிரானது. இது மார்க்க விழுமியங்களுக்கு அப்பாற்பட்டது.

கொரோனா வைரஸ் தாக்கிய முஸ்லிம் ஜனாஸாக்களை அரசினால் அடக்கம் செய்ய முடியாவிட்டால் எங்களிடம் தாருங்கள் என்பதை அழுத்தமாகக் கூற விரும்புகிறேன். நீங்கள் கூறப்போகும் உயிரியல் காரணங்களை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாரில்லை. முஸ்லிம் ஜனாஸாக்களை வைத்து அரசியல் செய்யும் அரசியல்வாதிகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

பள்ளிகளை உடைக்க வைத்து வாக்கு சேகரிக்க முயன்றதை போன்று இதையும் வைத்து வாக்கு சேகரிக்க முயலாமல் நாட்டினதும், முஸ்லிங்களினதும் நிலை கருதி இறைபக்தியுடன் செயற்படுங்கள். நாங்கள் போராடுவோம் எங்களின் ஜனாஸாக்களை அவர்கள் தந்தே ஆக வேண்டும்.

நீதிமன்ற நடவடிக்கைகள், வழக்குத் தாக்கல்களையும் தாண்டி, இயற்கையிலேயே கிடைத்த வளங்களை கொண்டு எங்களின் உரிமைக்காக போராடுவோம். இது சமூகத்தின் கூட்டுப்பொறுப்பு. இந்த எரிப்பு விடயத்தை ஏற்று கொள்ள முடியாது. – என்றார்.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.05.2020 இல் வெளியிடப்பெற்றது.